தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, மாசி 1 (13-2-'60). சனிக்கிழமை | இதழ் 35

பூம்புகார் அழகி

ஆரூர். சொ. ஆனந்தன்

"இளவரசி; அதோ அந்த நீலக்கடலின் அலைகளைப் பாருங்கள்!"

"ஊம்! என்னை இனிமேல் இளவரசியென்று கூப்பிட்டால் உங்களோடு பேசவேமாட்டேன்!"

"சரி சரி! அழகியென்றே அழைக்கிறேன்! ஆனால் ஓர் நிபந்தனை! நீயும் என்னை அழகனென்றே அழைக்க ஒப்புக்கொள்ள வேண்டும்!"

"சரி. அது போகட்டும்! அழகரே! அப்படியென்ன அலைகடலின் அழகிலே சொக்கி மயங்கிவிட்டீர்கள்? அழகாக நெளிந்து நெளிந்தோடும் அலைகள் உங்கள் உள்ளத்தை வலை போட்டுப் பிடித்துவிட்டனவா? அல்லது அலைகளின் நெளிவிலே வளைந்து நிலுமந்த நிலாவின் பிம்பத்தைக் கண்டு மயங்கிச் சிலையாகிவிட்டீர்களா?"

"அதோ! அந்த ஆண் அலைகள் நெளிந்து நெளிந்து ஓடுகின்றன! அந்த ஆண் அலைகளின் கைகளைப் பிடித்துக் கொண்டு, சலசலவென ஒலியெழுப்பி, பெண்ணலைகள் செல்கின்ற, அழகுமிக்கக் காட்சியைப் பார்த்தாயா? அந்த அலைகளெழுப்பும் காதல் கீதத்தைத்தான் கேட்டாயா?"

"அந்த அலைகள் எவ்வளவு சுதந்திரமாகக் களிநடனம் புரிகின்றன! கைகோர்த்துக் காதல் கீதமிசைத்து ஓடி ஆடுகின்றன! ஆனால் நாமோ இந்தப் பூம்புகாரின் சிறையிலே சிக்கித் தவிக்கிறோமே! கேவலம் அந்தக் கடலலைகளுக்குள்ள சுதந்திரங்கூட நமக்குக்கிடையாதே!"

"என்ன செய்வது? நீ அழகியாகப் பிறந்தாய்! பாராட்டுகிறேன்! ஆனால் என்னைப்போல ஓர் வணிகக் குடும்பத்திலே நீ பிறந்திருக்கக் கூடாதா? அல்லது நான் தான் ஓர் இளவரசனாகப் பிறந்திருக்கக் கூடாதா? ஒரே குலத்திலே பிறந்த கடலலைகளைக் கண்டு நாம் பொறுமைப் படுவதால் என்ன பயன்? நீயோ பூம்புகார் புகழும் சோழ மன்னனின் மகள்! இந்த நாட்டின் இளவரசி! ஆனால் நான் கேவலம் திரைகடலோடித் திரவியந் தேடும் வியாபாரியின் மகன்! நம்மை எப்படி இந்தச் சமூகம் சேர்ந்து வாழவிடும்?"

"அழகரே! இன்னொரு முறை அப்படித் தயவு செய்து கூறாதீர்கள்! இந்தப் பூம்புகார் மட்டுமல்ல...இந்தச் சோழ மண்டலம் மட்டுமல்ல ... இந்த உலகமே... எதிர்த்தாலும் நம் காதலை அழிக்க முடியாது. இதோ இந்த அலை கடல் பொங்கியெழுந்து இந்தக் குமரி மலையைத் தகர்த்து, உங்களால் எழுப்பப்பெற்ற உன்னத மதிலை உடைத்து வந்து இந்தப் பூம்புகாரை அழித்தாலும் அழிக்கலாம். ஆனால் நம் காதலை அழிக்க முடியாது. இது உண்மை."

"ஐயோ அழகி நிறுத்து. அப்படிச் சொல்லாதே. நம் காதலும் வெற்றி பெறவேண்டும். பூம்புகார் நகரத்தின் எழிற் காட்சிகளை நம்மால் மறக்கத்தான் முடியுமா? இந்த நகரின் எழிற் காட்சிகளை இதயத்தில் தாங்கிக் கொண்டு, நமது பெற்றோர்களோ மற்றவர்களோ காணமுடியாத இலங்கைக் காட்டுக்கு ஓடிவிடலாம்! அழகி! நாளை இரவு, தயாராய் இரு! நாமிருவரும் குமரி மலைக்குச் சென்று அதன் இரகசியக் குகை வழியாகக் கடற்கரையை அடைந்து, அங்கிருந்து இலங்கைக்குச் சென்று விடலாம்! என்ன? நாளைக்குத் தயாராய் காத்திருப்பாயா?"

"தங்களின் வேண்டுகோளை என்னால் நிராகரிக்க இயலுமோ? தங்களுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்க மாட்டேனோ? சரி! நேரமாகி விட்டது. அதோ, ஏதோ குதிரைகள் வரும் சத்தம் வேறு கேட்கிறது. நான் சென்று வருகிறேன்! அழகரே!"

இதைக் கூறிவிட்டு அழகி, அழகனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்று மறைந்தாள்.

மறுநாள் இரவு குமரி மலையடிவாரத்திலே அழகனும், அழகியும், ஆளுக்கொரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

"அழகரே, அதோ அந்தக் குமரி மலை அணையருகில் ஏதோ வெடிச் சத்தம் கேட்பது உங்கள் காதுகளில் விழவில்லையா?" இங்ஙனம் கூறி அழகி அழகனை எச்சரித்தாள். அழகி இதைக் கூறும்பொழுது இன்னொரு வெடிச் சத்தம் கேட்டது. அழகனும் அழகியும் ஓர் பாறையின் பின்னே பதுங்கிக்கொண்டார்கள்.

"அழகி! பூம்புகாரை அழிப்பதற்காக யாரோ துரோகிகள் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். இந்தக் குமரிமலை அணைதான் பூம்புகாரை இவ்வளவு நாளாகக் கடல் கொள்ளாமல் காப்பாற்றி வந்தது. இதன் ஒரு பகுதியை வெடி வைத்துத் தகர்த்துவிட்டால் கடல் புகுந்து பூம்புகாரையே அழித்துவிடும். அழகி! நீ இங்கேயே இரு. நான் போய் அந்தத் துரோகியை யாரென்று தெரிந்துகொண்டு வருகிறேன்."

"அழகரே நில்லுங்கள்; பார்த்துப் போங்கள்" என்று அழகி கூறுவதைக் கூட அவன் கேட்கவில்லை. பூம்புகார் நகரத்தின் மீது அழகன் கொண்டிருந்த குருட்டுப் பாசமானது அவனது கண்களை மறைத்தது. அழகன், பூம்புகார் நகரத்தை அழகுபுரியாக ஆக்கியவர்களில் ஒருவன். அந்நகரத்து வீதிகளை ஒழுங்குபடுத்த அவன் எவ்வளவு பாடுபட்டிருக்கிறான்? கடல் பொங்கும் பொழுது கடல் நீர் பூம்புகார் நகர வீதிகளில் புகுவதுண்டு. மேலும் சில நாட்களில் கடல் நீரால் பூம்புகார் நகரே அழிந்துவிடுமென்று ஒரு சிலர் அப்பொழுதே கூறிக் கொண்டிருந்தார்கள்! அதற்காகத் தன் தந்தையையும் மீறி கோடிக்கணக்கான பொற் காசுகள் செலவு செய்து, குமரிமலையின் பள்ளத்தாக்கிலே பெரியதொரு அணையை எழுப்பிய பெருமை அழகனைத்தான் சாரும். அவ்வளவு அரும்பாடு பட்டு தன்னால் கட்டப்பட்ட அணை அருகே வெடிச் சத்தம் கேட்பதைப் பொருட்படுத்தாமல் அவனால் செல்ல முடியவில்லை. நாட்டுப் பற்று கொண்ட அழகன், தன் காதலை விட, நாட்டைக் காப்பாற்றும் கடமையையே பெரிதாகக் கருதினான். ஆனால் தன்னை நெருங்கி வரும் பேராபத்தை, துரோகிகளின் கையிலே சிக்கி அழியப் போகிறோமென்பதை அவன் அப்பொழுது உணர்ந்தானில்லை.

மறுநாள் காலை பூம்புகார் நகரமே பரபரப்பாகக் காட்சியளித்தது. இளவரசி அழகியைக் காணவில்லையெனக் காவலாளர்கள் சந்து பொந்துகளிலெல்லாம் தேடிக்கொண்டிருந்தனர். தன் மகளைப் பறிகொடுத்த அரசன் கவலையோடு அங்குமிங்கு மலைந்து கொண்டிருந்தான். அப்பொழுது துரோகிகளின் தலைவனான அந்நாட்டு அமைச்சன் அரசன் முன்னே தோன்றி 'அழகியைக் கொன்று அவளது நகைகளைத் திருடிச் சென்ற அழகனைப் பிடித்து வந்திருப்பதாகக்' கூறியது கேட்டு அரசன் திடுக்கிட்டான். அதிர்ச்சி அடைந்தான்.

அழகனையும் தன் மகளின் நகைப் பெட்டியையும் கொண்டுவரும்படி

— 2-ம் பக்கம் —

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கட்டளையிட்டு விட்டு, அரசன் அவசர அவசரமாக அவையைக் கூட்டினன், நாட்டுப் பற்றுக்கொண்டு, நாட்டைக் காப்பாற்றத் தன் காதலையும் துறக்கத் துணிந்த, அழகன் குற்றவாளிக் கூண்டிலே கொலைகாரனுக, கொள்ளைக்காரனுக நிறுத்தப்பட்டான்.

"அழகா, நீ இந்நாள் வரை இந்த நாட்டிற்குச் செய்திருக்குந் தொண்டிற்காக உன்னைப் பாராட்டுகிறேன். ஆனுல் இந்நாட்டின் இளவரசியைக் கொன்று அழியாப் பழியைத் தேடிக்கொண்டாயே! அட மூடா! நீ கேட்டிருந்தால் இந்த அரச பீடத்தையே உனக்களித்திருப்பேனே! என் அருமைமகளை, அற்ப நகைகளுக்காகக் கொன்றுவிட்டாயே"

அரசனை நோக்கி அழகன் அமைதியாகக் கூறினுன்—

"அரசே! என்னைக் கொன்றுவிடுங்கள்! நான் கொலைகாரன்தான்! கொள்ளைக்காரன்தான்! ஆனுல் ஓடோடிச்சென்று குமரிமலை அணையை உடைத்துக்கொண்டிருக்கின்ற துரோகிகளைக் கைது செய்யுங்கள்!" அழகனை மேலே பேசவிடாமல் துரோகிகளின் தலைவன் குறுக்கிட்டுப் பேரிடிபோன்ற ஓசையுடன் சிரிக்கலானுன்.

"அழகா! அருமையான தந்திரம்! குமரிமலை அணையை உடைக்க யாரால் இயலும்? குமரிமலை அணை உடைந்து விட்டதென்று கூறினுல் எல்லோரும் அணையை அடைக்க ஓடி விடுவோம்! அப்பொழுது, நீ தப்பித்து இலங்கைக்கு ஓடிவிடலாமென எண்ணுகிருயா? இந்த நாட்டின் எழில் ராணி இளவரசியைக் கொலை செய்த உன்னைக் கொலை செய்த பிறகுதான் இந்த அவை கலையும்!" இங்ஙனம் அழகனைப் பிடித்து வந்த அந்தக்கயவன் கொக்கரித்தான். அந்த நாட்டின் அமைச்சனுயிற்றே அவன்! அவன் கூறுவதையே யாவரும் நம்பினர்!

மதியிழந்த மக்களும், "கொலைகார அழகன் ஒழிக!", "இளவரசியைக் கொன்ற அழகன் ஒழிக" என்று கூக்குரலிட்டனர். அரசனும், "மக்களின் தீர்ப்புத்தான் மன்னனின் தீர்ப்பு! அழகா! என் அருமை மகளைக் கவர்ந்து சென்று கொன்றதற்காக, உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்!" என்று தீர்ப்பளித்தான். இதைக்கேட்டு மக்கள் ஆரவாரித்தனர். ஒரு சிலர், கற்களை அழகன் மீது எறிந்தனர்.

அழகன் கற்களால் அடிபட்டுக் கலங்கினுனில்லை, விநுடிக்கு விநுடிஉருமாறுகின்ற களிமண்ணனைய மக்களைக்கண்டு மனத்திற்குள் சிரித்துக் கொண்டான். காலைக் கதிரவன் ஒளியிலே தங்கக் குழம்பு போன்று கடல்நீர் காட்சியளிக்கும்! இரவிலே, நிலவின் ஒளியிலே பால்போல அதுகாட்சி யளிக்கும்!

கடல் நீருக்குச் சொந்த நிறம் கிடையாது. ஒளியைப் பிரதிபலிப்பதால்தான் கடல் நீல நிறமடைகிறது! அதே போல் நாசக்காரர்களின் நயவஞ்சகப் பேச்சால் மக்களின் மாசற்ற உள்ளங்கூட மாறுபாடடையும் போலும்!

அழகன் தூக்கிலே தொங்கப்போகுமந்த அற்புதக் காட்சியைக் காண்பதற்காகத் திரண்டிருந்தனர்.

"உயிர் போவதற்கு முன்னுல் நீ சொல்ல விரும்புவதைச் சொல்லலாம்" என்று அரசன் அழகனை நோக்கி ஆணையிட்டான்.

"அரசே! பூம்புகாரைச் சூழ்ந்துள்ள பேராபத்தை நீக்க முயசிக்காமல் என்னைத் தூக்கிலிடுவதிலே எல்லோருங் கூடி நின்று பேரின்பம் காண்கிறீர்கள்!

தந்தையை விரோதித்துக்கொண்டு, அவர் திரைகடலோடி அரும்பாடுபட்டுச் சம்பாதித்துக்கொண்டு வந்த பெரும் பொருளைப் பாழாக்கி, இந்நாட்டின் இளைய வலிய வீரர்களை பலிகொடுத்து, என்னுல் எழுப்பப் பெற்ற அன்னையை-இந்தப் பூம்புகார் நகரத்து உயிர் நாடியை-இலங்கை அரசனிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு இந்த நாட்டின் துரோகிகளே வெடி வைத்துத் தாக்கிக்கொண்டிருக்கிருர்கள்! அரசே ஓடுங்கள் அல்லது ஆட்களையாவது அனுப்புங்கள்! என்னைப் பெற்றெடுத்த பொன்னுட்டை இணையற்ற பூம்புகாரைக் காப்பாற்றுங்கள். இதைக் கூறிவிட்டு அழகனே தூக்குக் கயிற்றை தன் கைகளிலே தாங்கி, தன் கழுத்திலே மாட்டிக்கொண்டான்! அரசனுக்கு அழகன் மீது சிறிது நம்பிக்கை பிறந்தது.

அவனது கண்ணீர், கல்நெஞ்சம் படைத்த அரசனின் இதயத்தையுங் கலக்கியது. "அழகா! நீ குற்றமற்றவனென்கிருயே அதை நிரூபிக்க உன்னுல் முடியுமா? அதற்கு ஏதாவது சாட்சியிருக்கிறதா?" கடைசியாக மனமிரங்கி அரசன் கேட்டான்.

"சாட்சி இருக்கிறது! அரசே! சாட்சி இருச்கிறது! அதோ! அந்தக் குமரி மலை அணைக்கும் அப்பால் இருக்கிறது!"

"என்ன? சாட்சி இருக்கிறதா? அழகா உன்னை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்! **என் செல்வ மகள் உயிரோடு இருக்கிருளா?** எங்கேயாவது அவளைச் சிறையிட்டு வைத்திருக்கிருயா? உண்மையைக் கூறிவிடு. உனக்கு இந்த நாட்டையே தந்துவிடுகிறேன்."

அரசனின் இந்த வார்த்தையைக் கேட்டு அழகன் கலகலவெனச் சிரித்தான்" "அட சுயநலப் பேயே! நாடு அழியப் போகிறதென்று நான் கூறுவதை நீ கவனிக்கவில்லை! உனக்கு உன் மகள் மட்டும் வேண்டுமா? உன் மகள் மட்டுமல்லடா அற்ப அரசா! இந்நாட்டின் மக்களனைவருமே மாண்டு மடியப் போகிருர்கள்!" அழகனின் இந்தச் சுடு சொற்கள் அரசனின் கோபத்தைத்தான் தூண்டின! அழகனைச் சவுக்கால் அடித்துத் தன் ஆத்திரத்தை தீர்த்துக்கொண்டான்.

"நீலக்கடல் இவனுக்காகச் சாட்சி கூறவருமாம். நல்ல விந்தையான பைத்தியமடா! இவன்;"—அரசனின் இந்தச் சொற்களைக் கேட்டு எல்லோருமே கலகலவென நகைத்தனர்.

"ஆம், அரசே இன்னும் சிறிது நேரத்தில் நீலக்கடல் சாட்சி கூற நேரே இங்கு வரப் போகிறது பாருங்கள்; இந்த எழில் மிகு பூம்புகாரின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று 'குற்றமற்ற அழகனைக் கொன்ற பாவிகளே' என்று அந்த நீலக்கடல் சீறப் போவதை நீங்களே பாருங்கள்; ஆனுல் இந்தக் காட்சியை - காணச் சகிக்க முடியாத அந்தக் காட்சியை - என்னைப் பெற்றெடுத்த பொன்னுடு கடலால் அழிக்கப்படும் அந்தக் கோரக் காட்சியைக் காண்பதற்கு முன்னுல் நான் சென்று வருகிறேன்."

இதைக் கூறிவிட்டுத் தூக்கு கயிற்றிலே தொங்கினுன் அழகன்! அவனது உடல் ஒரு முழக்கயிற்றிலே ஊசலாடியது! அப்பொழுது துரோகிகளிடமிருந்து தப்பிய அழகி, தடுமாறித் தடுமாறி மார்பிலே சொருகியுள்ள கத்தியொன்றைக் கையினுல் அமுக்கிப் பிடித்தவாறு, அங்கே வந்து சேர்ந்தாள்.

அழகன் தூக்கிலே தொங்குவதையும், அவன் பிணத்தின்மீது கற்களை வீசிப் பூம்புகார் மக்கள் இழிவுபடுத்தும் காட்சியையுங் கண்ட அவள், அலறித் துடி துடித்தாள். கடைசிக் காலத்தில் அழகனின் பிணத்தைக்கூட அவளால் நெருங்க முடியவில்லை. அதிர்ச்சி தாங்காது தன் காதலனின் பிணத்தைக்கூட நெருங்க இயலாத நிலையில் அப்படியே செத்து விழுந்தாள்; தன் மகள் உயிரோடு வந்ததைக் கண்ட அரசன் திரும்பிப் பார்த்தான்! அப்பொழுது நீலக்கடலும் சாட்சி கூற வந்திருந்தது. ஆம்! அழகனுக்காக அது பூம்புகார் நகரத்து வீதிகளைக் கடந்து அழகனின் தூக்கு மேடைக் கருகேயே வந்துவிட்டது.

அழகனையுப் அழகியையும் நெருங்க விடாது தடுத்தது பூம்புகார்! அந்தப் பூம்காரை அழித்து இருவர் பிணங்களையும் ஒன்று சேர்த்து மகிழ்ந்தது அந்த நீலக்கடல். அழகனையும், அழகியையும் ஒன்று சேர்த்து அடித்துச் செல்லும் கடலலைகளைக் கண்ட அரசன், "இந்தக் கடலலைகளுக்குள்ள கருணைகூட நமக்கில்லாமற் போய்விட்டதே!" என்று எண்ணித் தன் கட்டாரியை மார்பிலே செருகிக் கொண்டு கீழே செத்து வீழ்ந்தான்! அவனையும் சேர்த்து அடித்துச் சென்றன அந்த நீலக்கடலின் நெடிய அலைகள்! ★

"அமரர் கல்கி உயிருடன் வாழ்ந்த காலத்திலேயே அவர்மீது எவ்வளவோ குறைகள் கூறியிருக்கிருர்கள். எவ்வளவோ எழுதியிருக்கிருர்கள். அவருடைய எழுத்துக்கு மாசு கற்பிக்கும் திருப்பணியில் சிலர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அவர் இன்னுர் இன்னுர் எழுதியதை 'தர்ஜூமா' செய்துவிட்டார்; அதாவது பிறருடைய எழுத்தைத் தனதாக்கிக் கொண்டார் என்று சொன்னுர்கள். பேராசிரியர் கல்கிக்கு என்ன? எனக்கே இந்தப் பழி கிடைத்திருக்கிறது. நல்ல எழுத்தாளர்களுக்கெல்லாம் இந்தப் பட்டம் வெகு சுலபமாகக் கிடைத்துவிடும். இப்பொழுது தமிழ் நாட்டில் பிரபலமாயுள்ள எத்தனையோ சிறந்த எழுத்தாளர்கள் மீதும் இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தித்தான் வருகிருர்கள். இந்தமாதிரி பழியைச் சுமக்காத எழுத்தாளர்களைக் காண்பதரிது. இவ்வாறு ஒருவர்மீது அவதூறுகளைச் சிருஷ்டிப்பதும், குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதும் கொடிய முதலாளித்துவ மனப்பான்மைகள். தங்களுக்குப் பிடிக்காதவர்களைப் பற்றியும் பிடிக்காதவைகளைப் பற்றியும் முதலாளி மனப்பான்மை யுள்ளவர்கள் அப்படித்தான் தாக்குவார்கள். அதுதான் முதலாளிவர்க்கக் குணம் படைத்தவர்களின் மன இயல்பு. உலகத்தில் எந்தப் பெரிய மனிதர்கள் மீதும் இவ்வாறு அவதூறுகள் கூறித்தான் இருக்கிருர்கள். இவ்வாறு அவதூறுக்கு ஆளாகாத பெரிய மனிதர்களை நாம் பார்க்கவே முடியாது. இது யாரும் அறிந்ததுதான். இது பெரும்பாலான மக்களிடம் சாதாரணமாக இருக்கும் ஒரு குணம். அதாவது வாழ்க்கையில் முன்னுக்கு வரும் ஒருவனை; சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவனைத் தங்கள் பார்வைக்கு ஏற்றபடி தாழ்த்துவதிலும், தங்கள் காலடியில் அந்தப் பெரிய மனிதனை உருட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதிலும் இந்த மனிதர்களுக்கு ஒரு ஆசை."

—"கங்கை"யில் திரு. பகீரதன்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 13-2-'60 ‖ இதழ் 35

தட்டுங்கள்; திறக்கப்படும்!

இலம் என்று சோம்பிக் கிடப்பாரைப் பார்த்து நில மகள் சிரிப்பாள்! நாள் வரவில்லையே என்று அலைபவனைப் பார்த்துக் கால வெள்ளம் கைகொட்டும்! வழியில்லையே என்று கைவிரிக்கும் அமைச்சர்களைப் பார்த்து வெள்ளியும் தங்கமும் எள்ளி நகையாடும்! நூறு முயற்சிகள் தோற்றாலும் நூற்றியோராவது முயற்சியாகிலும் வெற்றி ஈட்டியே தீரும்!

இந்த உண்மைகளைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆயிரம் முறைகள் எடுத்துச் சொல்லினர். என்றாலும் அமைச்சர் பெருமக்கள் இவற்றை வெட்டிப் பேச்சு என்று ஒதுக்கித் தள்ளினர். விழலுக்கு நீர் இரைப்பதா என்றும் வெட்டிப் பேசினர். கடுமொழிக்கோ கண்டனத்திற்கோ அஞ்சிக் கடமையை மறந்ததில்லை கழகத்தவர். எனவே திரும்பத் திரும்பச் சொல்லினர் கழகத்தவர், திராவிடத்தில் மறைந்து கிடக்கும் செல்வங்களின் பட்டியலை. மாநில ஆட்சியி விருப்போர்க்கு இவற்றைத் தோண்டி எடுக்க நெஞ்சத்தில் ஆசையிருந்தாலும், அவர்கள் தாமே செயல்படக்கூடிய நிலையில் இல்லை. தில்லியினருளைப் பெறவும் முடியவில்லை. இத்தோல்வியை மறைப்பதற்காக "வானத்து நிலவைப் பிடித்து விளையாட முயலும் சிறுபிள்ளைகள்!" என்று நம்மைக் கேலி செய்தனர். ஆயிரமாயிரம் விளக்கங்களை எடுத்துச் சொன்னோம், அப்போதும். ஆகாத செயல்களுக்கு ஆகாயக்கோட்டை கட்டுவோரில்லை.-இதையும் சொன்னோம். மக்கள் உண்மை உணர்ந்து திரண்டனர். நம் குரலுக்கு வலிவு சேர்த்தனர்.

சாரின் வாரிசுகளாய் நடந்துகொண்டோர் படிப்படியாய் இறங்கி வந்தனர். "அப்படியா? காவிரி வட்டத்தில் எண்ணெய்யா? சேலம் மண்ணில் மாக்னசைட்டும் இரும்புமா? நெய்வேலியில் நிலக்கரியா? தில்லிக்குக் காவடி எடுத்திருக்கிறோம்; அவர்கள் திருவடியைத் தொழுதுகொண்டிருக்கிறோம்! அவர்கள் அருளி ஒரு பூதக்கண்ணாடி தந்ததும், உங்கள் கையில் இருப்பது நெல்லிக் கனிதானா என்று பார்க்கிறோம்! பொறுத்திருங்கள்!" என்றனர். இந்த நிலை மாறிற்று!

தட்டத் தட்டத் திறக்கப்படுகிறது தில்லிக் கதவு. அதன் ஒரு கட்டம்தான் செர்மன் சனநாயகக் குடியரசின் துணைத் தலைமை அமைச்சர் திரு. எய்ன்ரிச் ரா்வ் அவர்கள் வருகை. செர்மன் சனநாயகக் குடியரசுதான் (கிழக்கு செர்மனி) உலகிலேயே அதிகமான பழுப்பு நிலக்கரியைத் தருகிறது; ஆண்டு தோறும் 22 கோடி டன் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கிறது. அதில் அவர்கள் தயாரிக்கும் நிலக்கரியே அந்நாட்டுப் பொறியியல் தேவைகளுக்கும் இரசாயணத் தேவைகட்கும் பயன்படுகின்றது; உயிரூட்டுகின்றது. தொடக்க நாட்களில், "பழுப்பு நிலக்கரிதானே கிடைக்கிறது. என்ன செய்வது?" என அவர்கள் தடுமாறவில்லை. பழுப்பு நிலக்கரியிலிருந்து சாதாரண நிலக்கரியைத்தயாரித்துத் தம் தொழிற்சாலைகளுக்கு உயிரூட்டினர். தமிழகமும் இதே பிரச்னையைத்தான் சந்திக்கிறது! இங்கே நிலக்கரிப்படிவங்கள் கிடையாது; இருப்பனவோ பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் தாம். இந்த நிலையில் என்ன செய்வது என்று விழிக்கும் "பூகோள சாத்திர விற்பன்ன"ருக்கு அறிவு கொளுத்துவதுபோல் கிழக்கு செர்மன் துணைத் தலைமை அமைச்சர் பேசியிருக்கிறார்; தன் நாட்டு வளம் பெருகிய கதையைச் சொல்லியிருக்கிறார். "நானும் என் நாட்டவரும் பழுப்பு நிலக்கரியும் சாதாரண இரும்புத் தாதும்தானே கிடைக்கின்றன என்றிருக்கவில்லை. அவற்றையும் பயன்படுத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டோம். இன்று தொழிலில் முன்னிற்கிறோம்! நீங்களும் சேலத்து இரும்பு மட்ட இரும்பு என்று சொல்லி வாளாயிருக்காதீர்கள். அதை எப்படி நல்ல இரும்பாக்கிப் பயன்படுத்துவது என்று முயலுங்கள். உங்களுக்குதவ எங்கள் நாட்டிலிருந்து ஒரு தொழில் வல்லார் குழு விரைந்து வருகிறது. அத்தோடு உங்களுக்கு வேண்டிய கருவிகளை எல்லாம் நாங்கள் தருகிறோம். நாங்கள் இங்கு வந்திருப்பதே சென்னையை இன்னும் என்ன என்ன வழிகளில் தொழில் மயமாக்கமுடியும் என்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வதற்கே!" என்றெல்லாம் பேசியிருக்கிறார் திரு. என்ரிச் ரா்வ். அமைச்சர்களிடமும் நிலை கேட்டு, விளக்கியிருக்கிறார். தாழ்ந்து வரும் திராவிடம் வாழ்ந்து செழிப்பதற்கு அவர் காட்டும் அக்கறைக்கும் அறிவுரைக்கும் நன்றி தருகிறோம்.

தமிழக அமைச்சர்களிடம் தானே வரும் "நல்ல சமயம்" இது. அவர்கள் நமது போராட்டங்களின் பலனை அறுவடை செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்! "முன்னேற்றக் கழகம் சொன்னபடிப் போவதா?" என்று தனி வழி போகாமல் பொலிவைச் சேர்க்கட்டும்; தொழிலைப் பெருக்கட்டும்; ஆன வழிகளெல்லாம் தில்லியை நெருக்கட்டும். ஏனென்றால் அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்! ★

என் தாய்

(4)



பிறந்தது முதல் பிரிந்ததில்லை என்தாயை.

ஆனால், எங்களைப் பிரித்தது ஒரு நாள்.

"சூன் முதல் நாள் கல்லூரி தொடங்குகிறது. உடன் வருக"

—என்ற அஞ்சலட்டைதான் எங்களைப் பிரித்தது.

பிரியும்போது—

"தமிழ் கற்கத் தனித்து விடுகிறேன் என்மகனை; தமிழே நீதான் துணை"-தமிழை வேண்டினார் என் தாய்.

தாயின் கண்கள் குளமாயின; இமைகள் கண்ணீரில் மிதந்தன.

ஒட்டியகன்னத்திலே கோடிட்டது கண்ணீர்.

கட்டித் தழுவிக்கொண்டார் என்னை.

பிரிவுத் துயரைத் தெரியாத நான் தாய்க்காக அழுதேன்.

அந்தத் துயரை இப்போதுதான் அனுபவிக்கிறேன்.

"புகை வண்டிக்கு நாழியாகிவிட்டது" என்றேன்.

என் தாய் பெட்டி படுக்கைகளை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டார்.

"நானே தூக்கிக்கொள்கிறேன்" என்றேன்; மறுத்தார்.

"அடிக்கடி கடிதம் எழுது! இரவில் சுற்றாதே; எங்களைப்பற்றிக் கவலைப்படாதே."

கண்ணீர் நிற்கவில்லை.

தள்ளாடும் காலத்திற்கு இன்னும் சில நாள்தான் இருக்கிறது, என் தாய்க்கு.

எங்கள் குடும்பம் பெரிது-வருவாய் குறைவு.

"எனக்கு மாதா மாதம் பணம் வேண்டுமே?" என்றேன்.

"நானிருக்கிறேன். உனக்கேன் கவலை?" என்றார்.

தளர்ந்த உடல்; தளராத உள்ளம்.

தலையில் என் பெட்டி; நடையில் சிறு தளர்ச்சி,

என் கண்கள் காணக் கூசின.

"என்னிடம் கொடுங்களம்மா!"

தர மறுத்தார்கள்.

"நான்தான் தூக்கி வருவேன்."

அந்த நிகழ்ச்சி என் உள்ளத்தைக் கடவாத காட்சி.

எனக்குத் தமிழ் கற்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி.

"தமிழ் கற்க நீ செல், நான் பிச்சையெடுத்தாவது பணம் அனுப்புகிறேன்"

தாயின் உள்ளக் கிளர்ச்சி.

என் நெஞ்சை விட்டு அகலாதது அந்தப் பேச்சு.

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்துவிட்டன.

அன்புத் தெய்வம், அன்னையின் உருவம் என் உள்ளத்தில், அருமைத் தாயை தினம் தினம் கண்டு மகிழ்ந்த கண்கள் தமிழ்த் தாயைக் கண்டு கண்டு மகிழ்கின்றன, இப்போது.

இப்போது எனக்குப் பெரிய சிக்கலான எண்ணங்கள்:

என்னுடலுக்குள் இரண்டு உயிர்களில்லையே என்ற ஏக்கம்.

உடலிலிருக்கும் ஒரு உயிரை தாய்க் களிப்பதா? தமிழுக் களிப்பதா? விடை காண முடியவில்லை; வேதனை!

என் அன்னையின் பெயர் அருள்மணி.

அன்பு முற்றினால் அருள் என்பர்.

என் அன்னை மொழியின் பெயர் தமிழ்

இனிமை முற்றினால் தமிழ் என்பர்.

எனக்கு இளமையில் வறுமை; வேதனை.

அன்னைக்கு, மகன் தமிழ் படிப்பதால் பெருமை.

அன்னையின் அன்பு ஒரு புறம்; கடமை மற்றொரு புறம்.

நாற்பது வயதுடைய அம்மையார்களின் உடலில் என் நற்றாயின் உருவம் காணுகிறது.

இன்று பிரிவுத்துயர் ஒருவாறு தணிந்திருக்கிறது.

ஆனால், என் அன்னையின் பிரிவுச் சொற்கள்-உள்ளத்தில் பலவித எண்ணங்களாகப் பின்னிக் கிடக்கின்றன.

இந்தச் சிறு பிரிவே என்னைச் சித்திரவதை செய்கிறதே-நாளை வரப்போகும் பெரிய பிரிவு என்னை என்ன செய்யுமோ தெரியாது; தெரியாது!

—நீலமலையான்.

★

இன்றே எழுதுக!

அஞ்சி அஞ்சிச் சாவாயோ? புதுமை அள்ளி அள்ளித் தருவாயோ? சிந்தனை நிலத்திற் பஞ்சமோ? தெரியும் துறைகள், வழிகள் கொஞ்சமோ?

தமிழ் மொழியின் பெருமை ஒரு காலத்தில் உலகறியப் பரவியிருந்தது. அதன் வளம் அன்றிருந்த கிரேக்கம், ஆரியம், எபிரேயம், இலத்தீன் போன்ற மொழிகளைவிடச் சாலச் சிறந்தும் காலத்தை வென்று வாழத்தக்க வன்மையும் உடையதாயிருந்தது. தனக்கென்று ஒரு பண்பாடும் தனிக் குலமும் பெற்று உய்ந்தது. மொழிகள் எல்லாவற்றிற்கும் தனித் தனி நாகரிகங்கள் இல்லை. எல்லா மொழிகளும் தாம் தோன்றிய நாளிலிருந்து நீடித்து இன்றுவரை நிலை பெறவுமில்லை. அத்தகுதி தமிழைப் போன்ற ஒரு சில மொழிகளுக்கே உண்டு. சீரிய இலக்கணம், செம்மையான வாழ்க்கை முறைகள், அரசியற் கண்ணோட்டம் எல்லாம் பெற்ற சிலரே தங்கள் மொழி வாயிலாகப் பழைமைக்குரிய ஒழுகலாற்று நெறிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்திருக்கின்றனர். மொழிகளிற் பல தெய்வ வழிபாட்டின் அடிப்படையில் தங்களது இலக்கியங்களை வளர்த்துள்ளன, ஆனால் தமிழ் மொழியை மட்டும் அப்படிக் கூறுவதற்கில்லை. இலத்தீன் மொழி கிறித்துவ மரபைத் தழுவியும், கிரேக்கம் இயற்கை நெறி (pantheism)யைத் தழுவியும் வடமொழி வேதாகமங்களைத் தழுவியும் தங்களது மொழி வளத்தைப் பெருக்கின. தமிழ் மொழி மட்டும் தனிப் பெயர் எதுவும் தலைவனுக்குச் சுட்டாது நேரடியாய்க் கடவுள், மதம் எனும் பகுப்பில்இறங்காது பொதுமை நோக்கோடு தத்துவ நெறியில்வளர்ந்திருந்தது. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு ஆகிய நூல்களை இதற்குச் சான்றாய்க் கொள்ளலாம். இந்நூல்களில் பொதுக் கருத்துக்கள் தான் விளக்கப்பட்டுள்ளனவே தவிர, சமயச் சார்பாக எதுவும் வலியுறுத்தப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மொழிகளின் பழம் இலக்கியங்களிற் புராணப் பெருமைகள், மத நம்பிக்கை வழிபட்ட வருணனைகள் எல்லாம் ஏராளமாய் இருக்கின்றன. காட்டாகக் கிரேக்க மொழியில் ஓமர் என்னும் புலவர் எழுதிய இலியட், ஒடெசி என்னும் பாடல்கள் அத்தகைய நிலைகளை நினைவுபடுத்துகின்றன. இலத்தீன் மொழியிலும் மிகுதியாய் மதக் கருத்துக்களடங்கிய நூல்கள் அம்மொழியின் தோற்ற காலத்தில் உண்டு. தமிழிற் திருவாசகம், திரு அருட்பா, திருக்கோவையார் புராணம் ஆகிய நூல்கள் எல்லாம் சங்க காலத்திற்குப் பிற்பட்டவையேயாகும். திருவாசகம் கி. பி. இரண்டாவது, மூன்றாவது நூற்றாண்டுகளிலேதான் ஏற்பட்டிருக்கலாம் என்று பூரணலிங்கம் பிள்ளை போன்றார் கருதுகின்றனர். தமிழன் அறிவியல் வாதியாய் வாழ்ந்து வந்திருக்கிறான். ஆகவேதான் பகுத்தறிவிற்குப் புறம்பான மரபுகளுக்கு இடம் கொடுக்காமல் இருந்துவந்திருக்கிறான் என்று நினைக்கத் தோன்றுகிறது. கிரேக்க மொழியிலும் கலையிலும் வேறு நாட்டுச் சாயல் படுவதை அவர்கள் விரும்ப வில்லை. அதே போற்றான் பழந்தமிழர்களும் வேற்று - மொழிச் சார்பு, சாயல் எதையும் விரும்பாது சொந்த முயற்சியிலேயே தாழாது உஞற்றிப் புகழ் பெற்றனர்.

சங்க காலத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகளில் பல்வேறு தன்மையுள்ள தமிழ் நூல்கள் தோன்றின. சமண பௌத்த சமயச் சார்புள்ள நூல்களும் தோன்றின. குறிப்பாகச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, பெருங்கதை, சூளாமணி, யசோதர காவியம், உதயணன் காவியம், நாக குமார காவியம், நீலகேசி போன்ற நூல்களும் வெளிவந்துள்ளன. இத்தனை நூல்களும் இடைக் காலத்திலே தோன்றி மொழியிற் சொல்வளம், இலக்கண வளம், கற்பனை வளம், கருத்து வளம் போன்ற தன்மைகளை ஏற்றிச் சிறப்பித்துள்ளன. ஆனால் இன்று இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழி ஏற்றம் பெற வில்லை. உரியதோர் இடத்தையும் அடையவில்லை. மொழியுணர்ச்சி மட்டும் மிகுதியாய்க் காணப்படுகிறது.

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள், சூத்திரங்கள் எல்லாம் திரிபறக் கற்றும் தமிழ் மொழியின் தரமிக்க நூல்வளத்தை யாக்கும் பண்புபெருக வில்லை. சமுகத்திற்கு வீணாய் அஞ்சுவோரும், அளவுக்கு மீறிச் சுயநலம் பேணுவோரும், சூழ்நிலைக்காகக் காரணங் காட்டித் தப்ப முடிந்தால் அப்படிச் செய்வோருமே ஓரளவு மலிந்து வரத் தமிழகம் இன்று காட்சியளிக்கிறது

இன்றுள்ள நிலையில் ஒவ்வொரு மாணவரும் ஆசிரியரும் பல்கலைக் கழகத்திலே பேராசிரியன்மார்களிடம் பழகியும், நேரிற பாடங் கேட்டும், பெரும் நூல் நிலையங்களின் துணைக் கொண்டு ஆய்வுக்குரிய சிக்கல்களைத் தெளிந்தும், அறிவை நன்கு விரிவாக்க வாய்ப்பு உள்ளது. மேலும் வெளிநாடுகள் செல்லச் சிலருக்கும், வெளிநாட்டுத் தொடர்புகொண்டோரிடம் உறவுகொண்டு சிற்சில உண்மைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சூழ்நிலைகளும் உள்ளன. இவற்றையெல்லாம்விட எத்தகைய ஆராய்ச்சிக் கருத்தினையும் ஏற்றுத் தமிழ்மொழியை வளர்க்க இன்று ஒரு புத்துணர்ச்சி பரவலாய்க் காணப்படுகிறது. தமிழ்ப் பெரும்புலவர்களிற் சிலர் உயர்நிலைப்பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் பாடப் புத்தகங்களை எழுதுகிறார்கள். ஒரே கிள்ளி வளவனைப் பற்றி ஒரு மாணவன் எத்தனை ஆண்டுகள் படிப்பது! ஒரே அதியமான் நெடுமானஞ்சி, கணைக்காலிரும் பொறை, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, ஆவூர்கிழார், கோவூர் கிழார், மூலங்கிழார்களைப் பற்றி மீண்டும் மீண்டும் படிப்பதென்றால் புது இலக்கியம் எங்கே? பழைய காலத்தைவிடப் பன்மடங்கு எல்லாத் துறைகளிலும் ஏற்றம், மாற்றம் எல்லாம் காணப்படுகிற போழ்து, தமிழ் இலக்கியம் மட்டும் இருட்டறையில் இருக்கக் காரணம் என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. ஆற்றல் மிக்கப் பெரும்பாவாணர்கள் இருக்கிறார்கள், இன்றையத் தமிழ்நாட்டில். பாமாலையாத்தற்குரிய நுட்பங்களும், கருப்பொருளும் (Themes) ஏராளம் உண்டு. சமுதாயத்தின் எண்ண அலைகளைப் படம் பிடித்தாலே இரண்டு பெருங்காவியங்களைவிடப் பெரியநூலாய்ச்சமைத்துவிடமுடியும். புதுக் கருத்துக்களை நன்கு பொருத்திப் புது நூல்கள் ஆக்கப் புலவரும் பிறரும் அஞ்சுகின்றனர். துணிவில்லாமற் தொலைதூரத்தில் விலகிச் செல்கின்றனர் விவேகம் மிக்கோர். ஏன்நமக்கு இத்தொல்லை? யாராவது இதைச் செய்யட்டும் என்று தங்களது ஆற்றல், அனுபவம் மொழித்திறன், கற்பனை நயம் எல்லாம் நாட்டுமக்கள் பயன்படுத்துவதற்கில்லாது அமைதி காத்து ஒதுங்கிவிடுகின்றனர். நாட்டு நடப்பு இதுதான் என்றால் இலக்கியம் எப்படி வளரும்? அவ்வப்போது இங்கும் அங்குமாய்ச் சிற்சில நூல்கள் வெளிவருகின்றன. நல்ல சுவை மிக்க காவியங்கள். உண்மைதான் ஆயினும்அவை போதா. சொல்வளம், இலககண நயமெல்லாம் மிகுந்து உயர்பொருளாய்க் கருவூலமாய்ச் சில நூல்களேனும் தோன்றுதல் வேண்டும். இதுவரை அப்படிப் பல நூல்கள் வந்திருக்கக்கூடும். ஆனால் காணவில்லை ஆகவேதான் நமக்குக் கூறத் தோன்றுகிறது. நம் தமிழ் இலக்கியம் இருட்டறையில் இருக்கின்றதென்று. யாதாமொரு புலவர் அங்ஙனம் எழுதத் துணிந்தாலும் சில புல்லறிவாளர்கள் அவருக்குச் சேனாவரையம் தெரியாது, நச்சினார்க்கினியம் படிக்கவில்லை போலும், ஆங்கிலம் அரகராதான், நன்னூல் காண்டிகை யுரை, விருத்தியுரையெல்லாம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று இச்சகம் பேசி நூல் ஆசிரியருக்கு எழுகின்ற நேரிய ஆர்வத்தையும் படு குழியிற் புதைப்பர். திறனாய்கின்ற நீர்மை வேண்டற்பாலதே. ஆனால் பிறர்ஒரு முயற்சி செய்து நிலைத்த புகழெய்திவிடப் போகிறாரோ என்ற மாசு, அலர் எல்லாம் நம் புலவர்களில் சிலருக்கு ஏனோ தொற்று நோய் போல் தொடர்ந்து வருகிறது-தெரியவில்லை. எண்ணத்தின் அளவிலேயே, இச்சூழ்நிலை, ஒருவரது ஆக்கப் பணியை முறியடித்து விடுகிறது. இதனாலும் தமிழ் இலக்கியம் இடைக் காலத்திற்கு அதாவது 14-ம் நூற்றாண்டிற்குப் பிறகு சீரிய வளர்ச்சி பெறாமல் மந்தித்துவிட்டது எனலாம்.

உற்ற முயற்சியுடையோரை மென்மேலும் ஊக்குவித்து உறுபயன் பெறுகின்ற நிலைக்கு உயர்த்தும் சான்றாண்மை யுணர்ச்சி நன்கு பரவ வேண்டும். இந்தியாவிலுள்ள மற்ற பகுதிகளில் இங்ஙனம் இல்லை. மராட்டியம், உருது, மலையாளம், வங்காளம் ஆகிய மொழிகளின் வளர்ச்சி நினைப்பதற்கு மகிழ்ச்சியும், எழுதுவதற்குப் பெருமையும் அளிப்பனவாக இருக்கின்றன. அண்மைக் காலத்தில் தான் அம்மொழிகளின் அழகினை மக்கள் உணரத் தொடங்கினரென்றாலும் அதன் பிறகு அவர்களிடையே ஏற்பட்டுள்ள மறு மலர்ச்சி தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள மொழியுணர்ச்சியைவிடப் பதின் மடங்கு மிகுதியானதென்பதில் ஐயமில்லை. உருது மொழி இன்று உலகிலேயே ஆங்கில மொழிக்கு அடுத்த நிலையை அடையும் வேகத்தில் அறிவின் எல்லாக் கோணங்களிலேயும் வளர்ந்து வருகிறது. நிபுணர்கள் அனைவரும் தங்கள் ஆய்வுரை, தெளிவுரைகளை உருது மொழியிலேயே தெரிவிக்க முயலுகின்றனர். மொழி பெயர்ப்பு வேலையும், புது இலக்கியங்களும் மல்கி வருகின்றன. மலையாள மொழியிலேயும் அங்ஙனமே ஒரு புதிய உயிரோட்டம் ஏற்பட்டு நல்ல நல்ல நவீனங்கள், கட்டுரைகள், பாடல்கள் எல்லாம் வெளி வந்துகொண்டேயிருக்கின்றன. வங்காள மொழியை எடுத்துக் கொண்டால் மிகப் பெரும் அளவில் அதன் வளர்ச்சி பரவி ஆங்குள்ள மக்களை உணர்ச்சியால் ஒன்றுபடுத்திவிட்டது (Emotional Integration). அரசியலைப் பற்றி எவ்வளவு கருத்தோடு அலுவல்களைக் கவனித்துவருகிறார்களோ, அதே நிறைவோடு இலக்கிய வளர்ச்சியிலும் கருத்தைச் செலுத்திவருகின்றனர். இப்படியோர் எண்ணம், ஆர்வம் உலகிலேயே வங்காளம் தவிர வேறு எங்கும் காணமுடியாதென்று உறுதியாய்க் கூறலாம். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்குமுன்பே இம்மொழியின் பான்மை பல்வேறு துறைகளிலும் வளர்ந்து வரத்தொடங்கியது. 1937-ல் "மாடர்ன் ரெவ்யூ" என்ற புகழ்பெற்ற ஆங்கில இதழில் டாக்டர் சுனிதிகுமார் சட்டர்ஜி வங்காள மொழியில் இலக்கியம் வளர்ந்திருப்பதைப்போல் இந்திய மொழிகளில் எதிலும் அவ்வளவு இலக்கியங்கள் வளரவில்லை என்று எழுதியுள்ளார். அதே இதழில் இராமேஷ்பாசு என்பவர் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு தொடர் எவ்வளவு உணர்ச்சித் துடிப்போடும் பெருமித எண்ணத்தோடும் அமைந்திருக்கிறதென்பதை பாருங்கள்.

"To-day Bengal is not in the fore-front of the political movement, and her inhabitants are lamentably backward in Commercial enterprise, but there is no denying the fact that they have put almost their mental powers in the building up of a literature which, with all its defects, is unique and unparalleled in India... Literature is real in Bengal because it has relations to life."

— 9-ம் பக்கம் —

காணோம் !

கண்டுபிடித்துக் கொடுப்பவர்க்குப் பரிசு ரூ 500!

அண்மையில் வெளிவரவிருக்கும் வள்ளுவர் உருவம் பதித்த மாதிரி அஞ்சல் தலையைப் பார்த்தோம். அதில் **வள்ளுவர் தலையைக்** காணோம். கண்டுபிடித்துக் கொடுப்பவருக்குப் பரிசு ரூ. 500!

சூழலும் உலகினிலே உழலும் பிறவிகளே! அலறும் குரல்தான் இன்பப்பள்ளோ? அலையும் நிலைதான் குடியின் ஆட்சியோ?

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கைக்கு எதிராக இருப்பவர்கள் அத்தனை பேர்களும் மறக்காமல் எடுத்துக்காட்டும் சான்று ஏக இந்தியா என்ற பொய்க்கால் உருவத்தைத்தான்!' அந்தப் பேராசைப் பருவத்தின் அவமானச் சின்னம்தான் இந்தியக் குடியராசாகும். 1948-ம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தி ஆறும் நாளிலிருந்து 1960-ம் ஆண்டு முடியப் பத்து முறைக்கு மேலாகவே இதனைத் துணைக்கண்டத்தின் விடுதலை நாளாக விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள் விழாவாக்கி மகிழ்ந்துகொள்கிறார்கள். இந்த விழாவுக்குள்ள விளம்பரமும் விரயமாகும் வரிப்பணமும் இந்தியத் துணைக்கண்டத்தின் தேவைகளைக் கணக்கிட்டுக் கொண்டதில்லை பொது மக்களின் குதூகலத்துடன் சிறப்புப் பெற்றதும் நிச்சயமாக இல்லை. உலகத்தின் பெருமைக்குரிய பல நாடுகளின் விடுதலை விழாக்கள் எல்லாம் அந்தந்தப் பகுதிகளின் மக்களுடைய மனதிலே பொங்கி வழியும் மகிழ்ச்சியின் அறிவிப்புக்களாகவே அமைந்துவிடுகின்றன. ஆனால் இந்தியக்குடியரசு நாள் மட்டும் காங்கிரசார் என்ற குறிப்பிட்ட கட்சியினருக்கு மட்டுமே சொந்தமாக்கப்பட்டுவிட்டது. போலிச் சுதந்திரத்தைப் போற்றி வளர்ப்பவர்களுக்கு மட்டுமே இந்த விழாவில் கலந்துகொள்ளும் உரிமை வழங்கப்படுகிறது. இந்தியா என்ற மயக்க வலையில் வீழ்ந்துவிட்டவர்கள் மட்டுமே குடியரசின பெருமைகளைப் பேசுகிறார்கள்! இந்த நிலைபெறாத பல கோடிமக்கள் தேசியத் திரைக்குப் பின்னாலே இருக்கிறார்கள்என்பதைக் குடியரசு நடத்துவோர் இன்னும் நம்ப மறுக்கிறார்கள். தேசியக் கூடாரத்துக்குள்ளே இருக்கும் எண்ணற்றோரும் ஒரே மனதுடன் விருப்பத்துடன் இந்த விழாவினைக் கருதுகிறார்களா என்றால் இல்லை! வேளைக்கு வேளை புதுவேடம் போட்டுக்கொண்டுதான் முந்திய ஆண்டில் போற்றுவதும் பிந்திய ஆண்டில் போற்றித் தொழ மறுப்பதுவும் என்ற முறையை வகுத்துக் கொண்டுள்ளார்கள்! காரணம் குடியரசு நடத்தும் "குடியரசு" உண்மையில் மக்களாட்சியின் மாண்புகளை மறந்துவிட்டதுதான்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களை முற்றிலும் மறுத்துவிட்டு முரண்பட்ட நிலையிலேதான் இந்தியக் குடியரசின் இலட்சணங்கள் இருக்கின்றன. இந்தக் குடியரசு இங்கிலாந்திலேயிருந்து ஆணைகள் பிறப்பித்த வெள்ளையர்களை இன்னும் எசமானர்களாகவே கருதி மதிக்கிறது. 'காமன்வெல்த்' என்ற கட்டுப்பாட்டுக்குள்ளேதான் சிக்கிக் கிடக்கிறது. அதனாலே சிக்கல்கள் இல்லையென்றாலும் சிரங்குவித்திடும்போக்குகள் இன்னும் ஒழிக்கப்படவில்லை. சீமைத்துரைகளுக்குக் காவடி தூக்கியதும் சப்பம் கட்டியதும் இந்த நாட்டிலேயிருந்த காங்கிரசார் காலத்திலே மட்டுமல்ல; காங்கிரசார் காலத்திலேயும் உண்டு என்பதைக் காட்டுவதற்காகத்தான் இந்தியக் குடியரசு இலண்டனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது இதனாலே பெருமை அதிகமென்று கூடத்தான் சொல்கிறார்கள். மன்னர் பரம்பரையின் தொடர்பும் மகாராணியின் விருந்தும் மவுண்ட் பேட்டன்களின் வரவேற்பும் மாக்மில்லனுடைய மகிழ்ச்சி கலந்த பாராட்டும், பாரதத்தின் பிரதமர் என்ற ஒரே ஒரு தனிப்பட்ட மனிதருக்குக் கிடைக்கின்றது. தவிர, துணைக்கண்டத்து மக்களுக்குத் துளியளவும் துயரம் தீர்ந்துவிடவில்லை. இலண்டன் நகரத்துக் கவர்ச்சியும் காமன்வெல்த் நாட்டுப் பிரதமர்களின் சுந்தரமான அலங்காரப் பேச்சுகளும் வெளிநாடுகளிலே குறிப்பாகத் தென் ஆப்பிரிக்காவிலும் இலங்கையிலும் தொல்லைகளைத் தாங்கும் மக்களின் தவிப்பை நீக்கியதில்லை. குடியரசின் பெருமைகளை கைக்குத்தல் அரிசியிலும், அம்பர் சர்க்காவிலும், அப்பளத் தட்டிலும் காட்டிவிடுகின்ற காங்கிரஸ்காரர்களுக்கும் அவர்களின் அனுமதியுடன் அரசாங்கம் நடத்தும் அமைச்சர்களுக்கும் குடியரசின் பெருமை தாயகத்திற்குத் தரணியிலே கிடைக்கும் தகுதியில்தான் இருக்கின்றது என்பது பத்தாண்டுகளுக்குப் பின்பும் புரியவில்லை, தெரியவில்லை! அதனாலேதான் அடிமை மனப்பான்மையில் அகப்பட்டுத் தவிக்கும் அப்பாவிகளாகவே இருக்கிறார்கள்! நாட்டு விடுதலை, புதுவாழ்வு, தனி உரிமை, மொழியின் சிறப்பான பிறப்புரிமை ஆகியவைகளை உணர மறுக்கிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களைப் பின்னுக்குத் தள்ளும் தகுதியும் தன்மையும் தரப்பட்டுள்ளதாகக் கருதப்படும் இந்தியக் குடியரசு தினமும் அதன்கொள்கைச் சிறப்புக்களும் எந்த வகையிலும் எடைபோட இலாயக்கற்றவைகளாகவே இருக்கின்றன. பத்தாண்டு காலமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரும் செந்நீரும் நிறைந்த சகதியிலேதான் மூவர்ணக்காரர்களின் மேனிபெற்ற மினுமினுப்பும் விலாசம் தெரியாத மூலையிலே நின்றவர்கள் எல்லாம் முகட்டிலே தொங்கவுமான நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. இந்த முன்னேற்றத்தைத்தான் குடியரசின் சாதனைகள் என்கிறார்கள்! காங்கிரசின் கடந்த காலக் கதைகளைக் கூறிக் கல்லறைக்குள் சென்றவர்களையெல்லாம் காரணப்பொருட்களாக்கி, காந்தியாருக்குக் கட்டியங்கூற மறுத்தவர்களையெல்லாம் கர்மவீரர்களாகவும் கனவான்களாகவும் மாற்றி குடியரசின் பெருமைகளை நிலைநாட்டவும் நினைவூட்டவும் சர்க்கார் அரும்பெரும் அற்புத முயற்சிகளைச் செய்கிறது. விழா நாளன்று ஒவ்வோர் ஆண்டும் ரயில்வே நிலையங்களில் ஒளி வீசும் வண்ணவிளக்குகளின் வரிசைகள், அவைகள் மெருகேற்றிக் காட்டும் தலைவர்களின் பவனிகள் எல்லாம்குடியரசுச் சட்டங்களின் உயர் தன்மைகளைக் குறிக்கவில்லை! குடியரசு வேதனை வாழ்வினைத் தகர்க்கும் கருவியாக இல்லை; வேடிக்கையைத் தருகின்ற விபரீத விழாவாகவே உள்ளது! குடியரசு—அந்தச் சொல் குவலயத்தின் வேறு பல பகுதிகளிலே குதூகலத்தைப் பல்வேறு வகைகளிலே வழிகளிலே வரையறுத்துள்ளது. ஆனால் இந்தப் பாரத புண்ணிய பூமியிலேதான, குடியரசு குமுறுகின்ற உள்ளங்களைச் சவாலுக்கு அழைத்துக் குட்டுகிறது குருதிக் களத்திலே மிதக்கச் செய்கிறது. குதிரைப் படைகளின் குளம்படிபட்டு ஓடிப் பிழைக்கும் மக்களின் அலங்கோலத்தைப் படமாக்கி மகிழ்கிறது. ஏமாளிகள் இது போன்ற கோமாளிக் குடியரசுக் குணத்தை ஏற்றுக் கொள்ளலாம்; ஆனால் மற்றவர்கள் ஏற்பரா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனி நாட்டுத் தத்துவம் குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை முதற் பெருங்காரணமாகக் கொண்டதாகும். எண்ணிக்கையிலே குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குள்ள பண்டைப் பெருமைகளை—இலக்கியச் சிறப்புகளை பண்பாட்டு அருமைகளைக் காத்துக் கொள்ளும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் இந்தச் சிறப்பான அம்சம் அகில உலகம் சுற்றி அலங்காரப் பண்ணிசைப்போரின் நா அசைவிலே இருக்கிறதே தவிர நாட்டு மக்களின் உள்ளத்திலே உறைவிடம் பெற்றுக்கொள்ளும் வகையில் உயர் தன்மையான செயலிலே இல்லை! ஆண்டுதோறும் குடியரசுத் தலைவர் என்ற விசித்திர மனிதர் வானொலி வாயிலாகவும் வானொலியின் வழியாகவும் தருகின்றாரே வாழ்த்துக்கள்—அவைகளிலே இழைந்திருக்கும் இன்பச்சுவை இந்தியத் துணைக்கண்டத்து மக்களின் இதயத்திலே இடம் பெறவில்லை. இந்தக் "கலியுகத்து சனகரின் இராமராச்சியம்தான்" எல்லோரும் ஒன்று என்ற பிணைப்பை உருவாக்கித் தந்துள்ளதாம். இதனையும் சொல்லித் தங்களின் தற்குறித் தன்மைகளை தாராளமாக வெளிக்காட்டிக் கொள்கிறார்கள்! முன்னாள் மன்னர்கள் வைத்திருந்த ஆடம்பர வண்டிகளும் பட்டுக்குடைகளும் தான் பாரதத்தலைவரின் பவனியைக் காட்டுகின்றனவே தவிர பாரத மக்களின் பண்புகளை நிரப்பிய சொல்லும் இல்லை; செயலும் இல்லை! பழி தேடித் தருவோரும் பாதகம் செய்வோரும் படைத்தலைவர்களாக—பாரதக் குடியரசின பாதுகாவலர்களாக நுழைந்து இடம்பிடித்துக் கொண்டதால்தான் பரம்பரைப் புகழ் கொண்டு பாருக்கெல்லாம் பெருமைகளைச் சொல்லிய இனத்தவர் பதுமைகளாக நேரிட்டுவிட்டது. ஆளும் வர்க்கத்தின் ஆணவத்தலைவர்கள் என்ற முறையில் இராமலீலாத் திடல் வெளியில் பேசும்போதெல்லாம் தென்னவரின் முன்னோர்களை—டம் தோள் படைத்துத் தீரப்புகழ்க்கொடி நாட்டியவர்களைத் தகாத வார்த்தைகளைக் கொண்டு ஏசுகிறார்கள்! குடியரசுப் போதை குணமழித்துவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனியரசுத் தத்துவம் தாயகத்தின் விடுதலை வேண்டி நிற்போரின் தணியாத ஆர்வத்திலும் தருக்கரின் பிடியிலே நாடு சிக்கியிருப்பதைக் கண்டு வேதனைப்பட்டோரின் இதயத் துடிப்பிலும் உருவானதாகும். இதற்கு மாற்று மருந்தாகக் காட்டப்படும் இந்தியக் குடியரசு இங்கேயில்லாத இன்பங்களைத் தேடிக் கொணரவில்லை; இருந்த இன்பங்களை இழுத்துப் பறித்துக் கொண்டதாகும். பத்திரிகையாளரின் உரிமைகளை வெட்டிய கொடுங்கோலர்களைத் தாங்கி நின்றது இந்தியக் குடியரசு தான்! தனி மனிதன் சுதந்திர எண்ணங்களுக்குச் சிறையிட்டு அவனையும் அடக்கி ஒடுக்கிச் சிறைக்குள்ளே அடைத்து வைத்ததும் அந்தக் குடியரசுதான்! துணைக்கண்டத்தின் எந்த ஒரு சமுதாயத்தவரின் நலன்களையும் கருதாமல் மொழிக்குத் தேவையான மதிப்பையும் வழங்காமல், இந்தி ஆதிக்கத்தை வாழ்த்தி வரவேற்றதும் இந்தியக் குடியரசுதான்! ஒரே நாடுதான் என்ற

— 11-ம் பக்கம் —

தஞ்சை தி. மா. மு. க மாநாடு

14-2-60 காலை 9 மணி முதல்
குடந்தை அரண்மனைத் தோட்டத்தில் நடைபெறும்.

தலைவர் :
தோழர் கோவைச்செழியன் பி. ஏ.

திறப்பாளர் :
தோழியர் சற்குணம்

பொதுச் செயலாளர் **எஸ். டி. சோமசுந்தரம், டி. கே. பொன்னுவேலு** உள்ளிட்ட பல மாணவர்கள் கலந்துகொள்வர்.

இரவு 9 மணிக்கு **"பாவம் தமிழையா"** எனும் நாடகம் நடக்கும். அனைவரும் வருக.

அன்புள்ள நண்பா !

உன்னுடைய குழப்பமான கடிதம் கிடைத்தது. உன் மனதின் நிலைமையைக் கடிதத்தில் கண்டேன். எதிர்காலம் என்பது ஒரு பரீட்சை. ஆனால் அங்கு, இன்ன நேரத்தில், இன்ன பாடத்தில் மட்டும் கேள்வி கேட்கப்படும் என்ற அளவு முறை கிடையாது. நிகழ்கால நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக அமைத்துக்கொண்டு தடுமாறுமலிருந்தால்தான், வருங் காலப் புதிருக்கு ஈடு கொடுக்கமுடியும். உனக்கு இதை இன்று சொல்கிறேன்? எவ்வளவோ நாட்களுக்கு முன்பு சொல்லியிருக்கிறேன். ஆனால் நீ ''வாழ்க்கை என்பது பரீட்சையல்ல. அது ஒரு புத்தகம். நம் வாழ்க்கை முடிந்த பிறகு அந்தப் புத்தகம் முடியும். நம் வாழ்வைப் பற்றி அறிந்தவர்கள், அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நம்மை முன்னோடியாகக் கொள்வார்கள்!'' என்று சொல்லுவாய். அதனால்தானே என்னவோ உன்னுடைய வாழ்க்கையே ஒரு ரசமான கதை போலாகிவிட்டது. ஆனால் அது சோகத்தில் முடிய வேண்டாம். உலகம் மனோரஞ்சித மரம். அங்கே மலர்கின்ற மலர்கள் எப்போதும் மணப்பதில்லை. அது ஏனோ? அழகப்பனுடைய மனைவி இறந்துவிட்ட சேதி கேட்டதும் நான் அப்படித்தான் நினைத்தேன். நம்முடைய நண்பர்களிலொருவனான அவனை நாம் எப்போதும் ''அதிர்ட்டக்காரன்'' என்று போற்றுவோம். ஓட்டல் பில்லிலிருந்து, சினிமா டிக்கட் வரை நமக்கு 'சப்ளை' அவன்தான். ஆனால் கொடுக்கும் 'சப்ளையரல்ல' நாம்; தட்டிப் பறிக்கும் சப்ளையர்கள்தான். ஒரே பிள்ளையாக நினைத்ததை முடிக்கும் ஆற்றலும், வசதியும் உள்ளவனாக, நமக்குத் தலைவனாக அவன் இருந்தான். அவன் என்ன உளறினாலும் நாம் சகித்துக்கொண்டோம். ஏதாவது ஒரு பலனை எண்ணி. இப்படி வெற்றிகளையே கண்டவனுக்கு, இவ்வளவு தோல்விகள் வர வேண்டாம். காதலித்துக் கைப்பிடிந்த பெண் அவனுக்கு நாலைந்து குழந்தைகளை வைத்துவிட்டு, அவனுக்கு உலகின் மீது வெறுப்பேற்படுத்திவிட்டுப் போய்விட்டாள்.

முற்பகுதி நன்றாக உள்ள கதை, பிற்பகுதி நன்றாக இல்லை. பிற்பகுதி நன்றாக இருக்கும் கதை முற்பகுதியில் வருணனைகளை மட்டும் கொண்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த பல எழுத்தாளர்கள் பிற்பகுதி நன்றாக எழுதுகிறவர்களே. பெரும்பாலும் பிற்பகுதி நன்றாக அமையும்படி எழுதுகிறவர்களாகவே வெற்றி பெறுகிறார்கள். அதனால்தான் நானும் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தம் உண்டு என்று சொல்கிறேன். அழகப்பனுடைய வாழ்க்கை முற்பகுதியில் எவ்வளவு நன்றாக இருந்தது?

துணிக்கடையில் கண்ணொளியை விட விளக்கொளிதான் முதன்மை பெறுகிறது. இல்லாவிட்டால் துணிக் கடைக்காரன் அங்குலத்திற்கு ஒரு விளக்குப் போடுவானா? வாழ்க்கையில் பெரும்பாலும் குணங்களைவிடப் பணம்தான் முதலிடம் பெறுகிறது. ஆனால் பணத்தைப் பெற்று வாழ்வதைவிட பணத்தைப் பெற முயன்று வாழ்வதிலே இன்பமும், வெற்றிகளும் உண்டு. தோல்விகள் நேர்ந்தாலும் மனம் கலங்காது. இதுதான் என்னுடைய எண்ணம். எண்ணம் என்பது, பண்பட்ட மனங்களில் ஆழமாக வேர் விட்டு வளரும் ஒரு செடி. ஆனால் எல்லாச் செடிகளுமே பூத்துவிடுவதில்லை. என்னுடைய நினைவும் உன்னைப் பொறுத்தவரை தவறாய்த்தான் போய் விட்டது. நான் தோல்விகள் அதிகமாக அதிகமாகத் தைரியமும் பக்குவமும் அதிகமாகுமென்று நினைத்தேன். ஆனால் நீயோ வரப் போகிறதையெல்லாம் நினைத்து மனம் கலங்கிக்கொண்டிருக்கிறாய். சென்றதையெல்லாம் நினைத்து நினைத்து நொந்து போகிறாய். நீ கவலைப்பட வேண்டாம். உன் காதலியை நீ கைப்பிடிக்கக் காலம் வரும். அதையே நீ நோக்கிச் சென்றால். ஆனால் நீயோ ''என் காதல் தோல்வியடைந்துவிடும்போல இருக்கிறது. எங்களிடம் பணம் அதிகம் இருக்கிறது. அவர்களிடம் பணம் இல்லை. நான் சொத்துக்கு ஒரே பிள்ளை, அவள் இல்லாத சொத்துக்கு ஐந்தில் ஒரு பங்குக்காரி. எப்படி நடக்கும் எங்கள் திருமணம்?'' என்றெல்லாம் எழுதுகிறாய். இது உன் மனச் சஞ்சலத்தைத்தான் காட்டுகிறது. உன்னிடம் பணமில்லாமல் அவள் ஒருவேளை உயர்ந்த நிலையிலிருந்தால், 'ஐயோ! எப்படி நாம் அவளை அடைவது?' என்று கலங்கலாம். அர்த்தமிருக்கிறது! ஆனால் நிலை உனக்குச் சாதகமாகத்தானே இருக்கிறது. நீ இன்னும் சிறு குழந்தையில்லையே. 'அப்பா! அந்தப் பொம்மையை எனக்கு வாங்கிக் கொடு' என்று கதறும் சிறு குழந்தையா நீ! எனக்குப் பணம் முக்கியம் இல்லை. அந்தப் பெண்ணைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று சொல். உன் மனது பலவீனமானது. நீ சோம்பேறி, உனக்கு செல்வமில்லாமல் வாழ்வு நடத்த முடியாதுபோல் தோன்றுகிறது. நீ சொல்லுவாய் இல்லை இல்லை என்று. பெரும்பாலும் மனிதர்கள் எனக்கு இந்த வழி பிடிக்கவில்லை என்று சொல்லமாட்டார்கள். அந்த வழியில் போகலாமே என்பார்கள். வாழ்க்கைக்கு இரண்டு வழிகளே கூடாது. நமது வழி இதுதான் என்று தீர்மானம் செய்துகொண்டு நடக்க வேண்டும். ஆனால் கண்ணை முடிக்கொண்டு அல்ல!

இளமைக் காலம் பூப்போன்றது. ஆனால் வயது வந்த பருவம் பழம் போன்றது என்று தாகூர் சொல்லியிருக்கிறார். பூக்கள் காய்ந்து சருகானாலும் மணம் வீசும். கனி அழுகிவிட்டால் மணம் போகும். நாறும், உன் மனதைப் பக்குவமாக வைத்துக் கொள். அழுகவிடாதே. இளமைப் பருவ ஏமாற்றமும், தோல்விகளும் பிற்காலத்தில் நினைத்துப் பார்க்கச் சுவையாக இருக்கும். ஆனால் வயது வந்த பருவம் அதிர்ந்து கனிந்த பழம்போல. அதைச் சுவைக்கும் சந்தர்ப்பம் உனக்குக் கிடைத்திருக்கிறது. உனக்குத் தலை வலிக்கிறது என்ற செய்தி அவளுக்குக் கிடைத்தால் சரித்திர பாடத்தில் மொகலாயர்கள் கோயிலை இடித்த ரசமான நிகழ்ச்சியைப் படித்துக்கொண்டிருக்கும்போது கூட உன் முகம்தான் ஞாபகம் வருகிறது என்று அவள் உனக்கு எழுதியதையும் நீ எனக்கு எழுதியிருக்கிறாய். கடைக்கண் பார்வை கிடைத்தால் விண்ணையும் சாடுவோம் என்றார் ஒரு கவிஞர். உனக்கு முழுக் கண் பார்வையும் கிடைத்திருக்கிறது. அதனால்தானோ என்னவோ நீ தடுமாறுகிறாய். ''காதல் என்றால் என்ன? அதன் முடிவு எப்படியிருக்கும்? பல காதலர்கள் தோல்விதானே கண்டிருக்கிறார்கள்!'' என்று நீ காதல் கதைகளையும் ஒரு சில ருசிகர வரலாறுகளையும் நினைத்துக்கொண்டு கலக்கம் கொண்டிருக்கிறாய். ஒரு சிலருக்கு மனதிலிருப்பதைச் சொல்ல வராது. ஒரு சிலருக்கு மனதிலிருப்பதைத்தவிர வேறெதையும் சொல்ல வராது. நன்றாகத் தெளிந்தவர்கள்தான் சொல்ல வேண்டியதைச் சொல்லியும், கூடாததை அடக்கியும் தங்கள் மன நிலையை உயரவும், தாழவும் விடாமல் சம நிலையில் இருக்கிறார்கள். நீ ஏன் இன்னும் தெளியாமலிருக்கிறாய். கல் விழாமலே குளம் கலங்குகிறதென்றால் குளத்தில் நீரும் அதிகமில்லை. தரையும் வதியாக இருக்கிறது என்றுதானே அர்த்தம்? பின் ஏன் உனக்கு 'நீ குழப்பமுள்ள கோழை! பணமிருந்தும் ஏழை!' என்றால்கோபம் வருகிறது? எனக்கு இன்னும் கடுமையாக எழுத ஆசைதான்! பதினாறு வயதில் வெறிஉருவங்கள்கூடப் பெண்ணாகத் தோன்றும் என்பது பெரியவர் சொன்னது. ஏதோ பொதுவாகப் பெண்ணும் வெறிஉருவங்களும்ஒன்றாகக்கருதிஅவர் அப்படிச் சொல்லியிருப்பார். ஆனால் நீயோ திடீர் சந்திப்பில் ஒருத்திமேல் மோதிக்கொண்டு. மோதலில் பிறந்தது காதல் என்று மகிழ்வு கொண்டு, உயர்ந்தபல காதல் கதைகளை உன்னுடன் தொடர்பு படைத்துக் கொண்டு, முடிவும் அப்படித்தான் இருக்குமோ எனப் பயந்து என்னென்னவோ நினைத்துக்கொண்டு உளறுகிறாய். எழுதுகிறாய். திருந்தி வாழ முயற்சி செய்க; இல்லாவிட்டால் 'காதலை'க் கைவிடு. தீர்மானமான பதிலை எதிர்பார்க்கிறேன்.

—''அருணன்.''

"தென்றல்"

(நாளிதழ்)

புத்தாண்டுப் பிறப்பன்று வருகிறது!

ஆசிரியர் :

ஈ. வெ. கி. சம்பத்

காலந் தாழ்த்தாத செய்திகள்-தனித்தமிழில் சிறப்புத் தலைப்புக்கள்-தி. மு. க. தலைவர்களின் சிறப்புரைகள்-கேலிப் படங்கள் - திரைச்செய்திகள்-உலகத்துச் செய்திகள்

அனைத்தும் கொண்டு அழகிய அமைப்புடன் இயங்கும்!

தனியிதழ் ஏழு காசுகள்

பிற விவரங்களுக்கு :

தென்றல் நியூஸ்பேப்பர்ஸ் பிரைவேட் லிமிட்டெட்,
69, பீட்டர்ஸ் சாலை,
சென்னை-6.

சென்னைக் கல்லூரிகள் மாணவர் தமிழ் மன்றம்

கூட்டும்

கவியரங்கம்

17-2-60 அன்று மாலை நடக்கிறது.
ஆசிரியர் **கண்ணதாசன்** பங்கேற்கிறார்.

"தென்றல்"

அடுத்த இதழ்

கருநாடகச் சிறப்பிதழ்

''தென்னகம்'' ஆசிரியர் கே. ஏ. மதியழகன் பீ. ஏ., ஆசிரியர் கண்ணதாசன் மற்றும் பலர் எழுதுகின்றனர்.

அளவும் விலையும் வழக்கம்போன்றே!

வாழ்வாங்கு வாழ்ந்தவர்!

— ஔவை. சு. துரைசாமி —

வையத்தார் உள்ளுவவெல்லாம் ஓர்ந்தளந்துரைத்த புலவராகிய திருவள்ளுவர், திருக்குறட் கருத்துக்களை ஈட்டிய திறத்தை ஒருசிறிது காணலாம். உலகில் வாழும் மக்கள் பலரும் உணர்வு செயல்களில் வேறு வேருக இருக்கின்றனர். ஒத்த வுணர்வும் ஒத்த செயலும் ஒத்த வுருவும் உடைய இருவரைக்காண்பது எவராலும் இயலாது. இவ்வேற்றமை இடந்தோறும் காலந்தோறும் ஒப்ப நிகழும் உண்மை. சுருங்கச் சொல்லின், வேற்றுமைக்கே உறையுளாகிய இவ்வுலக மக்களுடைய கருத்தில் ஒருமை கண்டு, அதனை அறம் பொருள் இன்ப வகைகளிற் பகுத்தடக்கிச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பெரும்பணி "எல்லார்க்கும் எளிதில் இயலும் செயலன்று" செயற்கரிய செய்யும் பெரியோருள்ளும் திருவள்ளுவர் ஒருவர்தான் தோன்றியுள்ளார்; அவருக்கு முன்னே பின்னே இன்றுகாறும் ஒருவரும் தோன்றிற்றிலர்.

இங்ஙனம் ஒப்புயர்வின்றி உயர்ந்தோங்கி விளங்கினும், திருவள்ளுவர், மக்களுள் ஒருவரே யாவர். எனவே, அவர் மக்களைப் போலவே கற்பன கற்று, உணர்வன வுணர்ந்து. பெறுவன பெற்று, நுகர்வன நுகர்ந்து, வாழ்வாங்கு வாழ்ந்திருத்தல் கூடும். அவ்வாழ்க்கையிடையே இத்திருக்குறளிற் கண்ட கருத்துக்களை மணிபோலத்தேர்ந்து மேற்கொண்டார் என்று கருதுவது தவருகாது. இச்செயற்கு இவர்க்குத் துணை செய்த கருவி யாது? மக்களாகிய நமக்கு மனம் கருவியாதலின், திருவள்ளுவர்க்கும் அதுவே கருவியாதல் தெளிவாம். மனம் கருவியாக மக்கட்கு உணர்வு உண்டாம் என்பதை அவரே, "மனத்தானும் மாந்தர்க்குணர்ச்சி" எனறும், அம்மனமும் தான் கூடியிருந்து வாழ்வாங்கு வாழுமிடத்துத் துணையாகும் இனத்தால் தான் சிறப்புணர்வு பெறுதற்குச் சிறந்த கருவியாகும் என்பதை, "மனத்து உளது போலக்காட்டி ஒருவர்க்கு இனத்து உளதாகும் அறிவு" என்றும் கூறுகின்ருர். கூறவே, திருவள்ளுவர் இத்திருக்குறளைச் செய்தற்குச் சிறந்த கருவியாக நன்மனமும் நல்லோர் இனமும் உடையராய் இருந்தாரென்பதை இனிது தெளியலாம்,

நன்மனமும் நல்லினமும் என்ற இரண்டும் கருவியாகக் கல்வி, கேள்வி முதலியசெயல்களால் அறிவுச்செல்வம் ஒருவர்க்கு உண்டாகும். "கேடில் விழுச் செல்வம் கல்வி"; "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என்று கூறிய திருவள்ளுவர், இவற்ருல் உளதாகும் அறிவுச் செல்வத்தைப் பயன்மேல் வைத்து, "அறிவுடையாரெல்லாம் உடையார்" என்று வற்புறுத்தியிருப்பது காண்க.

கல்வி கேள்விகளே யன்றி ஒருவன் தான் அறிவுச் செல்வம் பெறுதற்கு அவன் செய்யும் வினையும் கருவியாம் என்று திருவள்ளுவர் குறிக்கின்ருர்: "மனம் தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும் இனத்தூய்மை, தூவா வரும்" என்பதனுல் மனந்தூய்மை இனந்துய்மை, செய்வினை தூய்மை, என்ற மூன்றும் குறிக்கப்படுவது காணலாம். மனத் தூய்மையால் கல்வியறிவும், இனத்தூய்மையால் கேள்வியறிவும், வினைத் தூய்மையால் ஒட்பமும் உண்டாதலின், அறிவுப் பேற்றுக்கு வினையும் கருவியாம் என்று தெளியப்படும்.

திருக்குறட் கருத்துக்களாகிய செல்வத்தை யீட்டிய திருவள்ளுவர்க்கு நன்மனமும் நல்லினமும் நல்வினையும் நல்ல கருவிகளாய்த் துணை செய்துள்ளன. மனக்கருவியாக நூல்களைக் கற்றலைச் செய்தும் இனம் கருவியாகச் சான்ருேர் உரைப்பவற்றைக் கேட்டும், வினை கருவியாகப் பிறவற்றை மெய்ப்பட வுணர்ந்தும் திருவள்ளுவர் அறிவுச் செல்வராயினர். அதனுல், "செல்வரை யெல்லாரும் செய்வர் சிறப்பு" என்றபடி அவர் காலத்தும் அவர்க்குப் பின்வந்தகாலத்தும் உளராகிய எல்லாரும் திருவள்ளுவரைச் சிறப்பித்தனர். இரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த **சீத்தலைச் சாத்தனுர்**, "பொய்யில் புலவன்" என்றும் இவ்வாறே பிறரும் அவ்வக் காலங்களில் வாய்க்கு மிடந்தோறும் மறவாதே சிறப்புச் செய்துள்ளனர். அவற்றையெல்லாம் திரட்டித் தொகுத்துக் கூறலுறின் இக்கட்டுரை வரம்பின்றிப் பெருகும்; ஈண்டைக்கு அது பொருளுமன்று.

இனி, நம் திருவள்ளுவர் நூல் வாயிலாகவும் சான்ருேர் வாயிலாகவும் ஈட்டியவற்றை ஓராற்ருல் நாம் தெரிந்துகொள்ளும் வகையில், நூல் மேலும் சான்ருேர் மேலும் வைத்து உரைத்துள்ளார். ஆதலால் அவற்றை ஈண்டுக் காணலாம். வையத்தார் உள்ளத்து உள்ளுவவெல்லாம் ஓர்ந்துணர்ந்து அளந்துரைத்த வாற்ருல் திருவள்ளுவர் பிற சான்ருேர்களும் நூல்களும் உரைத்தவற்றை யெடுத்தோதினுராயின் அவரது புலமை மிக்க சிறப்பெய்துமேயன்றிக் குறை யெய்தாது. அவர் தாமே "அரியகற்றுஆசற்ருர் கண்ணும் தெரியுங்கால், இன்மை அரிதே வெளிறு" என்பதனுல் அவருடைய மாண்பு பெரிதாதலையுணர்பவர், பிற நூல்களையும் சான்ருேர் கூறுவனவற்றையும் எடுத்தோதிக் காட்டுதலால் அவரது புலமை சீர்பெற்றுத் திகழ்வதை நன்கு தெளிவர். நூலாராய்ச்சி செய்து பொருந்தாதவற்றை யெடுத்தோதி மறுத்தல் நூலுணர்த்தும் சான்ருேர்க்கு இயல்பாதலின் அவ்வியல்பே பற்றி நம் திருவள்ளுவர் உரிய விடங்களில் பொருந்தாத கூறும் பிறர்கூற்றை எடுத்தோதி மறுத்தலைச் செய்துள்ளார். ★

அவரே பரிசுபெற்ருர்!

இவ்விதழ் நான்காம் பக்கத்தில் அன்பர் ஒருவர் கேள்வியாக அனுப்பிய குறிப்பொன்றை, "காணேம்!" என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிருேம். அதற்கு, அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வள்ளுவர் ஓவியத்தை வரைந்துள்ள **திரு. வேணுகோபால் (சர்மா)** அவர்கள் அளித்த விளக்கம் அடுத்த இதழில் வெளியாகிறது. அரசினரின் பரிசுபெற்ற திரு. வேணுகோபால் அவர்கள் தீட்டிய ஓவியம்தான் மேலே உள்ளது. ஓவியர் தாம் இப்படத்தை இம்முறையில் வரைந்ததற்குத் தரும் விளக்கமே அடுத்த இதழில் வருகிறது.

"தென்றல்"
அதிகம் செலவாகும் இலக்கியக் கிழமை இதழ்.
★
(உள் நாடு இலங்கை உட்பட)

ஆண்டுச் சந்தா	ரூ. 7-50
ஆறு மாதம்	ரூ. 3-75

(வெளி நாடு)

ஆண்டுச் சந்தா	ரூ. 10-50
ஆறு மாதம்	ரூ. 5-25

"தென்றல்" — சென்னை-6.

"முல்லை"
இலக்கியத் திங்களிதழ்.
★
(உள் நாடு இலங்கை உட்பட)
ஆண்டுச் சந்தா... ரூ. 3-00
வெளி நாடு
ஆண்டுச் சந்தா ரூ. 4-50
"முல்லை"—சென்னை-6

திறவா நெடுங்கதவு

"தொட்டனைத் தூறு
மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

இது இன்றும் பொய்யா மொழியே. கல்வி என்பது வயிற்றுப் பிழைப்புக்காக வேலை தேடும் ஒருவன், அவ்வேலையைப் பெறத் தேவைப்படும் நுழைவுச் சீட்டாகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும்தான் பெறும்பட்டத்தை உபயோகப்படுத்துகிருன். ஆனுல் கல்வியின் நோக்கம் அதுவன்று. வேலையை மேற்கொண்ட உடனேயே, கற்கும் பழக்கத்தைக் கை விடுகிருன். "கற்றது மறவாமை நன்று".

ஒரு சிலருக்குத்தான் நாள்தோறும் படிக்கும் வழக்கம், வாழ்வில் இணைபிரியாத இன்பத் தோழனுகிறது. ஆர்வம் உள்ள பலருக்குங் கூடப் பிறபல தொல்லைகள் படிக்கும் வாய்ப்பை அறவே மறுத்து விடுகின்றன. உடலில் உள்ள பிற பாகங்கள் பழுது படாமல் இருக்கப் பயிற்சி எவ்வளவு இன்றியமையாததோ, அதே அளவு மூளைக்கும் பயிற்சி (வேலை) தேவை. இல்லையேல் அதன் வளம் குன்றும். குன்ற, அதனுல் விளைய இருந்த பெரு நன்மை விளையாது பாழாகும்.

விந்தியத்திற்கு இப்புறம் உள்ள தென் மானிலப் பல்கலைக் கழகங்கள் உயர்தரப் படிப்பிற்குத் தனிப்பட்டவர்களை அனுமதிப்பதில்லை; மூன்ருண்டு உழைத்த ஆசிரியரே உரியவர். (வித்துவான் தேர்விற்கு மட்டும் முப்பதாண்டு நிரம்பியவர் உட்காரலாம்.) பலருடைய முன்னேற்றத்திற்குப் பெருந்தடைக் கல்லுங்கூட. தனிப்பட்டவரை அனுமதிக்காததற்குக் கூறப்படும் காரணங்கள் —

I கல்வியின் தரம் குறைகிறது.

II படித்தவர் வேலை இல்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகமாகும்.

III நல்ல ஒழுக்கம், உயர்ந்த பண்பாடு, சிறந்த கட்டுப்பாடு, பழக்க வழக்கங்கள் போன்றன இரா.

இவைபோன்ற இன்னும் பல.

ஆனுல் இவையனைத்தும் உண்மைதானு? சென்னையைப் பொறுத்து இன்று பல்கலைக் கழகக் கல்வியின் நிலை என்ன? பட்டதாரிகளின் கல்வி அறிவின் தரம் எந்த அளவில் இருக்கிறது என்பது பலரும் அறிந்ததே. மேற்கூறியனவாய "மாணவ நலன்கள்" (கல்வித்தரம், பண்பு நல்லொழுக்கம் முதலியன) பொதுவாகப் பல்கலைக் கழகக் குழுவினராலும் பெற்ருேராலும் மற்ருேராலும் மாணவரிடமிருந்து எதிர்பார்க்கத் தகுந்தனவே. ஆனுல், கல்லூரி செல்லாதார் மாட்டு இவை இரா என்பது எங்ஙனம் பொருந்தும்? பேராசிரியரும் கல்லூரி முதல்வரும் வற்புறுத்தித திணித்தும் பல மாணவரிடை ஒழுங்கும் பண்பும் கட்டுப்பாடும் கல்வியின் தரமும் காண முடியவில்லை. தானே முயன்று முனைந்து பிற பல வேலைகளுக்கும் தொல்லைகளுக்குமிடையே கற்பவன் மேற்கூறிய 'மாணவ நலன்கள்' அனைத்தும் இயல்பாகவே அமையப்பெறுகிருன்.

நாட்டில் பெரும்பாலான மக்கள் நடுத்தர வகுப்பினர். செல்வச் சீமான்வீட்டுக் குழவிகளுக்குக் கல்வி ஒரு பொழுதுபோக்குக் கருவி.

இவை இரண்டும் போகக் கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு பள்ளி இறுதிப் படிப்பு வரை படித்து முடிப்பதே முயற் கொம்பு. அதன் பின் பட்டப் படிப்பு எட்டாக் கனி. மிகக் கீழ் நிலையில் உள்ள வீட்டுக் குழந்தை பட்டப் படிப்புக் குறித்து, 'ஆசைப்பட்டு' மனத்தில் நினைத்துப் பார்க்கக்கூட அவனது குடும்பச் சூழல், அதற்கு வேண்டிய கற்பனை வளத்தையும் நினைவுச் செல்வத்தையும் அளிப்பதில்லை. ஆகையால் பட்டப் படிப்பு இன்மையால் பெருமளவிற்குப் பாதிக்கப்படுபவர்கள் மக்கள் தொகையில் பெரும்பாலான எண்ணிக்கையுடைய நடுத்தர வகுப்பினரே.

வாழ்க்கையில் முன்னேற்றமும் உயர்வும் படிப்படியாக இருந்தால்தான், அடைந்த உயர்வும் முன்னேற்றமும் உறுதியாகவும், அடைந்தவன் அதை அருமையாகப் பேணிக் காத்து மகிழ்வுடன் வாழவும் உகந்தனவாகும். திடீர் உயர்வு அவன் தலைமுறையிலேயே திடீர் தாழ்நிலைக்குக் கொண்டு தள்ளலாம். எங்கோ ஓரிருவர்தான் குதிரைப் பந்தயத்தால் பெற்ற பணத்தை அப்படியே வைத்துக்கொண்டு பணக்காரர்களாகவே வாழ்கின்றனர். அதுவும் அடுத்த தலைமுறையில் நிலைத்து நிற்கும் என்பதும் நிச்சயமில்லை. ஆனுல் படிப்படியாக உயர்ந்த எதுவும் விரைவில் வீழ்ந்து படுவதில்லை. இவ்வுண்மை ஒரு குடும்பத்திற்கும் பொருந்தும். நாட்டிற்கும்பொருந்தும். முன்னேற்றத்தின் வேகம் அல்லது விரைவு சற்றுக் குறைவாக இருந்தாலும் இருக்கலாம். ஆனுல் உயர்வு பெற்ற அந்நிலையினின்று சரிந்து படாமல் இருப்பது நலம், சாண் ஏற, முழம் சறுக்கிறுற்போல். இத்தகு உறுதிப்பாடுடைய பொருளியல் முன்னேற்றம் கல்வியறிவுடன் சேர்ந்து பெற்றதானுல்தான் நிலைக்கும்; இன்றேல் ஐயமே. கல்வி நன்கு கற்றவன் பிறகு பொருள் தேட வழி தேடிக்கொள்ளுவான், கிடைத்ததையும் அழிக்கமாட்டான்; உள்ள நிலையினின்றும்கீழ் இறங்கமாட்டான். திடீர் வீக்கம் ஆபத்து.

படிப்படியான உயர்வே உகந்ததாகையால், மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் அதற்கு அடுத்த மேல் நிலையான நடுத்தர நிலை அடையவும், நடுநிலையில் உள்ளோர் அதற்கடுத்த உயர்நிலையான உச்சநிலையை அடையவும் ஆன வழிவகை எதுவோ அதுவே அமைதியான ஆனுல் உறுதியான உயர்வாகும். இத்தகு உயர்வைக் கல்வியினுல் பெருமளவு பெறச் செய்யலாம். "அறிவுடையார் எல்லாம் உடையர்." அறிவின் துணைக்கொண்டு பிறசெல்வங்கள் ஆக்கப்படுவதால் அறிவுடைமை அனைத்தும் உடைமையாகிறது. இவ்வறிவைத் துலக்கி வளப்படுத்தி அதன் முழுப் பயனையும் பிழிந்து தரச்செய்வது உயர்கல்வி எனல் பொருந்தும்.

தற்போது பட்டப்படிப்பு என்ருல் அது செல்வந்தர் வீட்டுக் குழவிகளுக்குப் பொழுதுபோக்குக்கு இடமாகவும்; அவாதம் பெற்ருேரின் பணத்திற்குப் பெருமை தேடித்தரும் மெருகாகவும இருக்கிறது. ஆனுல் ஏழைகளுக்கு - ஏழைத் தந்தை தாய்க்கு வாழ்நாள் முழுதும் உழைத்து உழைத்து-உடல் உரத்தையும் உள்ள சொத்தையும் உருக்கிக் கல்லூரி செல்லும் மகனுக்குத் தியாகம் செய்துவிட்டு வாழ்நாளில் எதையும் அனுபவிக்கமுடியாமல் ஏங்கிச் சாகவேண்டிய நிலையினதாகவும் இருக்கிறது. அரசாங்கமோ பொருளாதார முன்னேற்றத்திற்கே பணம் போதாமல் கடன் வாங்க வேண்டி இருக்கிறது. இந்நிலையில் கல்வி முன்னேற்றத்திற்கு மேலும் செலவிட அதிகப்படியான பணத்தை எப்படிப் பெறுவது என்பது வழி தெரியாத சிக்கல். மற்றும் ஏழை மாணவர்களுக்குக் கல்லூரியில் செலவிடும் பணம் பெருமளவு வீணுகிறது என்றும் அதற்கு ஏற்ற பலனைத் தருவதில்லை என்பதும் பல கல்லூரி முதல்வர்களின் கருத்து.

இவை அனைத்தினையும் களைய வழி என்ன? இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளிலும் விந்தியத்திற்கு அப்பால் உள்ள மாநிலங்களிலும் உள்ளதைப் போன்று தனிப்பட்டவர் தேர்விற்கு உட்கார அனுமதிப்பது நலம். தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா சென்ற டாக்டர் எஸ். சந்திரசேகர் என்பவரை, வாடகைக்கார் ஓட்டும் டிரைவர், வழியில் காரை நிறுத்தி நேரு எழுதிய நூலில் சில ஐயங்களை வினவினுனும். அந்த டிரைவரை "உனது படிப்பு என்ன" என்றதற்கு, தான் ஒரு எம். ஏ. என்று விடையிறுத்தானும். கூலிக்குக் கார் ஓட்டுபவன் எம். ஏ. எப்படிப் படிக்க முடிந்தது? தனிப்பட்டவரைப் பல்கலைக்கழகத் தேர்விற்கு அனுமதித்த ஒரே வழியினுல்தான்!

பதினுறு, பதினெட்டு வயதில் பள்ளியிறுதித் தேர்வு முடித்த இளைஞர் பிறகு செல்வக் குறைவாலோ அன்றி இல்லத்து இன்னல்களாலோ கல்லூரி செல்லாத காளையர், பணிமனைகளில் வேலை செய்ய முற்படுகின்றனர். 8 மணி நேர வேலையும், 7 அல்லது 8 மணி நேர உறக்கமும், காலை, மாலை 2 மணி நேர பிற பொழுதுபோக்கும் போக **எஞ்சிய 6 மணி நேரத்தை நாள்தோறும் கொன்னே கொல்கின்றனர்.** வேலையில் அமர்ந்ததும் அதோடு உலகில் இனி கறக வேண்டியது அதிகம் இல்லை என்றும், "கற்றது உலகளவு; கல்லாதது கைம் மண்ணளவு" என்றும் கருதி அவர்தம் பெற்ருேர் மண முடிவுசெய்து 'முடிச்சு' போட்டுவிடுகினறனர்.

பின்னர் கேட்கவேண்டுமா? அவனுக்கு இதுவரை தனியே அமர்ந்து சிந்திப்பதறகு இருந்த 1 மணி நேரங்கூட, மணததிற்குப் பிறகு இல்லாமல் போய்விடுகிறது. உடல் நூலார் கொள்கைப்படி ஒருவனுக்கு 20 வயது முதல் 35 அல்லது 40 வரை உடல் வளர்ச்சியும, மூளையின் கற்பனை ஆற்றலும் வளர்ந்து வளமான நிலையை அடைந்து முதிர்கிறது. உண்டாக்கியும் உருவாக்கியும் செய்யும் (Creative work) செயல்களுக்கு உரிய பருவம் இதுதானும். ஒருவன் ஒரு துறையில் நாட்டம் கொண்டு முனைந்து முயல விரும்பினுல் அவன் அதைத் தனது 40-வது வயதிற்குள் செய்ய முயலட்டும். பிறகு முயல்வது முயற்கொம்புதான் என்று பேரறிஞர் பெர்னுட்சாவும் கூறினுர். சேக்சுபியர் எழுதிய 37 நாடகங்களில்கூட, அவரின் இந்த நடுத்தர வயதில் எழுதியனவற்றில்தான், அவரது அறிவின் முழு ஆற்றலும் மொழியின்நளின நடையும், வேகமும் இருப்பதாகத் திறனுய்வாளர்கள் கருதுகின்கின்றனர்.

ஆதலால் இப்பருவத்தில் பயன்பட வேண்டிய மூளையை — பல்லாயிர இளைஞர்களின் அறிவு வளத்தை —வீணுக்குவது கையில் உள்ள பொருளை விட்டெறிந்து விட்டு, உதவிக்கு ஊராரின் கையை எதிர்பார்ப்பதறகு ஒப்பாம்.

தனிப்பட்டவர் தேர்வு எழுத அனுமதித்தால், அதை மேற்கொள்ளும் மாணவன், தான் எடுத்துக் கொண்டதைத் தானே முடிக்க வேண்டியவன் ஆதலால், வீண் பொழுது போக்கமாட்டான். அவனது உழைப்பும் அதிகமாகும் "மெய் வருத்தம் பாராது கண் துஞ்சாது -- தன் கருமமே கண்ணுக இருப்பான். (திரு. ஞா. தேவநேயப் பாவாணர் இளமையில்-ஆம்பூரில் இருந்தபோது ஆசிரியப் பணியாற்றும் போது இரவு 2 மணி வரை விழித்துக் கற்பாராம்.) கருமமே கண்ணுக இருப்பதால் ஒருவன் வீண் பொழுது போக்க மாட்டான். வீண் பேச்சுப் பேசி வம்பு வளர்த்து காலத்தையும் பணத்தையும் வீணுக்கி. அதனுல் உடல் நலத்தையும் இழக்க மாட்டான். வேலை செய்கிற இடத்திலும் முன்னிலும் நன்முறையில் பழகுவான்; பணிபுரிவான். கற்கும் மாணவனுகப் பிறரால்கருதப்படுவதால், பிறரால் நன்கு மதிக்கப்படுவான், பிறரின் அனுதாபத்திற்குப் பாத்திரமாவான். அதனுல் பிறரால் நன்கு நடத்தப்பட்டு, தானும் அதற்கு ஈடாக நன் முறையில் அவர்களிடம்நடந்து கொள்வான்.

மேலை நாட்டிலும் தானே கற்று உயர்ந்தவர் பலர். உதாரணம்: சேக்சுபியர், டாக்டர் சான்சன், ஆபிரகாம் லிங்கன், சான் ஸ்டுவர்ட் மில் போன்றவர்கள். நம் நாட்டிலும் பண்டிதமணி கதிரேசர், திரு. வி. க. போன்றவர்கள் இப்படியே இன்னுள் அறிஞர் பலரில், பண்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், டாக்டர் மு. வரதராசனுர் மொழி இயல் முனைவர் தேவநேயப் பாவாணர் போன்றவர்கள். இவர்கள்மாட்டுக் காணப்பெருத ஒழுக்கமும் தரமும் திறனும் கல்லூரியிலேயே கற்றவர் மாட்டு அப்படி என்னதான் அதிகமாகக் காணப்படுகிறது?

அடுத்தது கற்றவர் வேலையில்லாத் திண்டாட்டம் ஆண்டு தோறும் பட்டம் பெற்று வெளி வரும் அத்தனை பேருக்கும் அரசாங்கம் வேலைக்கு உத்தரவையும் கையில் கொடுத்தேதான் அனுப்புகிறதோ? பத்தோடு பதினென்று என்று இவர்களையும பட்டம் தந்தே அனுப்பி விடலாம்.

கல்வியில் தரம் குறையும் என்பது மற்ருெரு வாதம். பள்ளியிறுதி வகுப்பு முடிந்து வேலையில் அமரும் எல்லோரும் மேற்கொண்டு பல்கலைக் கழகப் பட்ட படிப்பிற்கு முனைபவர்கள் அல்லர். எழுத விரும்புவோர் ஒரு சிலரே. அந்த ஒரு சிலருக்குப் பல்கலை கழகம் எதிர்பார்க்கும் தரம் நிச்சயம்உண்டு. அல்லது அப்போது சற்றுக் குறைந்திருந்தாலும், நாளாவட்டத்தில் சரியாகி விடும். அவன் வாழ் நாள் முழுதும் மாணவனே. அறிவை வளத்துக் கொள்ளுகிருன்; தரம்தானுக உயர்கிறது.

ஆதலால் தனிப்பட்டோர் தேர்வு எழுதுவதற்கு, தற்போது அடைத்துக கிடக்கும் **"திறவா நெடுங் கதவுகளை"த் திறந்து விட்டால்,** அறிவுப் பசியுடன் அவதியுறும் ஆயிரமாயிரம் இளங்காளைகளுக்கு, 'அஞ்சல்' என்ற சொல் அருளிய நல்ல சொல்லுக்குப் பாத்திரமாவார்கள். அரசாங்கத்திற்கும் பணச் செலவும் குறையும். நாட்டில் அறிவுக்குத் தடையும், முன்னேற்றத்திற் தத் தேக்கமும் உடைத்து எறியப்படும்.

—ஏலம்பாக்கம்
மா. பொ. இராமச்சந்திரன். பி. ஏ.

ஜூபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
...சங்குவிலாஸ் ... திண்டுக்கல்ரோடு, மதுரை.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

இவர் தம் தாய்மொழியைப் பற்றி, எவ்வளவு பூரிப்போடு சொல்கிருர் என்பதைப் பாருங்கள்: "இன்றைக்கு இந்திய நாட்டில் வங்காளம் அரசியல் துறையில் முன்னணியில் இல்லை. அதேபோல் வணிகத்துறையிலும் வருந்தத்தக்க நிலையிலேதான் பின்னணியில் உள்ளது. ஆனல் வங்காள இலக்கியத்தைத் தங்களது ஒன்றுபட்ட மனேவலிமையால் அதை இந்தியாவிலேயே ஒப்பதும் மிக்கதுமில்லா உயர்நிலைக்கு வங்காளிகள் வளர்த்திருக்கிருர்கள் என்ற பேருண்மையை மறக்கவே முடியாது. ஏன் ? வங்காளியில் உள்ள இலக்கியம் உண்மையான இலக்கியமாயிருக்கிறது. காரணம் அது மக்களது வாழ்க்கையோடு நேரடியாய்த் தொடர்பு கொண்டதாயிருக்கிறது!" இப்படிச் சொல்கிருர் என்ருல் நிலைமை தமிழைவிட எவ்வளவு முன்னேற்றம், என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அமைதியான நாட்களில் இலக்கியம் வளர்ப்பதை விட அரசியல் ஆதிக்கம் அந்நியராட்சி, ஆரவாரம். அகவாழ்வில் இருள் சூழ்ந்த இழிநிலை என்றிருக்கும் நாட்களில் ஒரு நாட்டு மக்கள் தங்களது குழந்தகளை வளர்ப்பது போல் அந்நாட்டு இலக்கியத்தை வளர்த்துள்ளனர் என்ருல் அந்தப் பெருமை வங்காளிகளுக்குத்தான் வரலாறு அளித்து விடும் என்றே தோன்றுகிறது.

தமிழ் நாட்டிலும் இதைவிடப் பன்மடங்காக இலக்கிய வாழ்வைச் சித்தரிக்கஆர்வமிக்கோர் பலருண்டு. பொருளாதார வாய்ப்பையும், இடையூறுக்குட்பட்ட சூழ்நிலைகளையும் காட்டுகின்றனர். காரணங்கள் காட்டிக் கடமையை நாம் ஆற்றுவதினின்றும் காலந்தாழ்த்தக் கூடாது. கருத்துக்களைப் புதுவடிவோடு யாத்தல் வேண்டும். பழைய சங்கப் புலவர்களையும் விஞ்சும் புலமைப் பெருக்கு வளர வேண்டும். அப்படிச் செய்ய முடியாதென்பது திறனிலும் அறிவாற்றலிலும் நம்பிக்கையற்ருேர் பேச்சு. எளிமை, இனிமை என்பதற்காகவே இலக்கியங்கள் என்றும் இருக்க முடியா. செம்பொருள் அடக்கிச் சீர்பட்ட தந்துவக் கருத்துக்களைக் கடுநடையிற் காண வேண்டி வந்தால் அது எவ்வகையிலும் குறைவுடையதன்று ஆற்றல் வெளிப்பட, சொல்வளம் பெருக, புது இலக்கண வழிகள் திறக்கப்பட கடுநடையிலும் மொழி வளரட்டும். பல சங்க காலங்களை நாம் உண்டாக்கிக் காட்ட வாய்ப்பு, வன்மைகள் இருக்கின்றன. ஆனல் மனவளம் இல்லை. அதனலே தான் தமிழ் இலக்கியம் இன்னும் இருட்டறையில் இருக்கிறது.

மற்றும், தமிழ் வளர்ப்பதாகச் சொல்லும் செல்வந்தர் சிலர் சில விழாக்களுக்குத் தலைமை வகிக்கவும், மாருகச் சில தமிழ்ப் புலவர்களால் பாராட்டுரை பெறுவதுமே தமிழ்த் தொண்டு என்ற தவருன கருத்தில் அழுந்திக் கிடக்கின்றனர். இத்தகைய செல்வந்தர்களால் நடத்தப் பெறும் கல்வி நிலையங்கள், வேறு வகைப்பட்ட ஏற்பாடுகளில் எல்லாம் பணியாற்றும் அறிஞர்கள் பலர் தங்களது மெய்யான ஆய்வுரைகளை வெளிப்படுத்தவொண்ணுது தன்மானக் குறைவாய் நடத்தப்படும் கீழ்மை யுணர்ச்சிகளையும் நாம் "தமிழ் வளரத் தடைகள்" என்னும் அட்டவணையில், சேர்க்காமலிருப்பதற்கில்லை. மன உரிமையில்லாமல் பண உரிமையால் பாழ்படுத்தும் இப்பிற்போக்குத் தன்மை தமிழ்ப் புரவலர்களிடத்தில் மறைய வேண்டும். "கால் வயிறு முக்கியமா ? கல்வியாராய்ச்சி முக்கியமா ?" என்னும் கேள்விக் குறியால் பலர் துவண்டு மாள்கின்றனர். வாழ்க்கையின் சுழலுக்கு உட்பட்டு அதைவிட்டுச் சற்றும் வெளி வராதும் போகின்ற நிலைமைகளையும் நாம் காணுமலில்லை. தமிழை வளர்ப்பது ஏதோ சிலருக்கு வருவாய் அளிப்பது மட்டுமல்ல; வளமான எக்கருத்தையும் அவர் எடுத்தியம்ப நேர்மையான வசதிகளை ஆக்கிக் கொடுக்க வேண்டும். அதுதான் மெய்யான தமிழ்த் தொண்டு ஆகும். அன்றித் தமிழின் பெயரால் நடத்தப்படும் ஓர் வகைப்பட்ட வணிகம் அல்லது சாதுரியம் என்றே கருதப்படமுடியும். மற்றும் அரசியலாரும் தமிழ் மொழிக்கு உரிய இடம் கொடுத்து மதித்துப் பல கோடிகள் ஒதுக்கிப் புது ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இவைகளைச் செய்தாலன்றி இருட்டறையிலுள்ள தமிழ் இலக்கியம் வெளியுலகில் சிறப்புடன் உலவ வழியில்லை என்பது உறுதி.

இறுதியாக, நல்ல தமிழ் நூல்களுக்கு உரை அல்லது விளக்கம் எழுதுவோர் அந்நூல்களின் முதல் நூலாசியர்களுடைய உணர்வு, நுட்பம் ஆகியவற்றில் நுழைந்து அதே உணர்வை வெளிக்காட்டும் முயற்சியின்றி அரை குறையாய் ஆற்றுகின்ற முயற்சி பெரிதும் கேடே விளைவிக்கும். சேக்சுபியர் நூல்களை மொழி பெயர்த்தால் அவருடைய உயர்ந்த மேதையையும் நுண்மான் நுழைபுலத்தையும் வெளிபடுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். மொழியை மட்டும் மாற்றித் தமிழாக ஆக்கி வைப்பதில் பயன் ஒன்றுமில்லை. சில நவீனங்கள், தத்துவங்கள் எல்லாம் இதே போற்ருன். அடித்தள நுட்பம் கெடாமல் மொழி பெயர்க்கபட வேண்டும். உரையாசிரியர்கள் புதுமைக்காக வென்று வலிந்து சற்றும் பொருந்தாத முறையில் பொருள் சொல்வதென்பது ஒரு மரபாகி விட்டது. இது விரும்பத்தக்கதன்று. பழைய நூலாசிரியரின் கருத்தில் பற்பல இடங்களில் பழுது தோன்றினுல் அதை அப்படியே காட்டாது பூசி மெழுகும் வேலை நன்றன்று. ஒவ்வொருவரும் இதே போக்கிற் சென்ருல் உரை யெழுதுவதென்பது உதவாக்கரை வேலை என்ற பொருளுக்கு இறங்கி விடும். ஆராய்ச்சி செய்வதிலும் முன்னேக்கம் செய்தல் வேண்டும். கல்வெட்டுக்களில் குழவிக் கற்களைக் கண்டால் சிவலிங்கம் என்பதும், அருகில் அம்பு. வேல் போன்ற இருப்புக் கருவிகள் கிடந்தால் முருகன் என்றும் வாதிடும் தன்மையும் நடுநிலைமைக்குட் பட்டனவாயிருக்குமா என்று பொருத்திப் பார்க்க வேண்டும். பழமை என்பது மட்டுமே பெருமையாகி விடாது. காலமும் பகுத்தறிவும் அதை எப்படி நோக்குகின்றன என்றும் சீர் தூக்கிப் பார்த்தல் நன்று.

நந் தமிழ் மக்கள் இவ்வளவு நிலைமைகளுக்கும் துணிந்து இலக்கியத் துறையைப் பக்குவப் படுத்திஞற்ருன், உலகியலில் அசைக்கமுடியாத பெருமையோடு அவர்கள் வளர வழியுண்டு. அதற்கிடையில் இருட்டறையில் ஒளிரும் மின் மினிப் பூச்சியின் தோற்றம் போலவே அவர்களிடையே எழும் சிற்றிலக்கியங்களும் சிறு தொண்டுகளும் ஆகும் என்றே கூறலாம்

—வே. சௌந்தரராசன்.

வாழ்க! வாழ்க!

பாகனேரி திரு. இராமநாதன் அவர்களின் புதல்வர் **குப்பாத்தான் என்ற சுப்பிரமணியன்,** திரு. முத. சுப. மு. முத்துக்கருப்பன் அவர்கள் புதல்வி **கண்ணுத்தாள்** என்ற **சுந்தாவல்லியை,** கடந்த 7-2-'60 அன்று வாழ்க்கைத் துணைவியாக ஏற்ருர்.

மணமக்களைத் "தென்றல்" வாழ்த்துகிறது. வாழ்க! வாழ்க!

—**ஆசிரியர்.**

எவருக்கு, என்ன இலாபம் ?

கேள்வி :—திருத்தணி முருகன் தமிழ்நாட்டுக்கு வந்து விட்டதால் யாருக்கு இலாபம் ?

பதில் :— ம. பொ. சிக்கு ! அவருக்கு நாள்தோறும் இரண்டு பட்டைச்சாதம் கிடைக்கிறதாம், திருத்தணிக் கோவிலிலிருந்து. போதாதா ?

நூல் நயம்

காசே கடவுள்

(நாடகம்)

ஆசிரியர் :
சாவர் சீத்தாராமன்
எம் ஏ., பி. எல்.

நாடகம் பரவலான நம்பிக்கையை வளர்த்துவிட்டிருக்கும் நாட்கள் இவை. பிற கலைகளின் போட்டியால் "நாடகம் வாழ்வதா? மாள்வதா?" என்ற விஞ வெடிக்கும் இந்நாளில் திரையுலகில் மின்னும் தாரகைகள் கூட நாடகக் கலையுலகில் தங்கள் ஈடுபாட்டைக் காட்டி அதை வாழ வைத்துவிட்டனர்; எனவேதான் நம்பிக்கை அரும்புகிறது. நம்பிக்கையை அரும்ப வைக்கும் இந்த நற்ருெண்டுகளின் ஒரு பகுதியாய் மிளிர்கிறது, திரு. சாவர் சீத்தாராமன் அவர்களின் படையல்.

நாடக ஆசிரியர் தாம் கற்பனையில் சந்தித்த பர்மாவர்மா என்ற மனிதரையும் பிறரையும் வைத்து இந்த நாடகத்தைப் படைத்திருக்கிருர்.

ஏற்கனவே நாடக மேடையில் நன்கு அறிமுகமான இக்கதையை, நாடகத்தைக் காணுதவர்கள் படித்து இன்புறுவதற்கு நூல் வடிவிலும் தந்திருக்கிருர். ஆசிரியரின் நறுக்குத் தெறித்த உரையாடல்களும், திருச்சி வாசுதேவன் இடையிடையே அமைத்துத் தந்திருக்கும் பாடல்களும் கதையோட்டத்தை அழகுபடுத்துகின்றன. ஆசிரியர் விரும்புவதுபோல, பொழுதுபோக்குடன் புதுமையுணர்ச்சியும் எழுகிறது, நாடகத்தில்.

அழகான இந்நாடகத்திற்கு ஒரு சுவையான முன்னுரையையும் எழுதியிருக்கிருர், ஆசிரியர். முன்னுரையின் பக்கங்கள் பெருகுவதால் இன்னும் பல சத்தான செய்திகளே கிடைக்கும். மாருக வாசகர்களை அஞ்ச வைத்துவிடாது. அழகான நாடகத்தையும் சுவையான முன்னுரையையும் தந்த ஆசிரியர்க்கு நாம் தரும் செய்தி இது :

"ஏழை மனிதகுலம் காசையோ கடவுளையோ காணுவிட்டாலும், நீங்கள் வெற்றியைக் கண்டுவிட்டார்கள் !'

விற்பனை உரிமை:
புக்சு (இந்தியா) பிரைவேட் லிமிட்டெட்
சென்னை—1.
விலை ரூ. 2.

★

தேனருவி

ஆசிரியர் :
சேயார்சி தியாகன்

திங்களிரு முறையாக, டெம்மி 1/4 அளவில் வெளிவரும் இந்த ஏடு, சில நல்ல நோக்கங்களைக் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளது. சுவையான கதை, கட்டுரை, கவிதை, நாடகங்களைத் தருகிறது. அத்தோடு உள்ளே ஒவ்வொரு பகுதிக்கும் சூட்டப்பட்டிருக்கும் தலைப்புகள் எண்ணத்தை ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளன. நல்ல சரளமான தமிழ்நடையும், அழகான அமைப்பும் அணி செய்கின்றன.

அலுவலகம் :-
"தேனருவி"
சென்னை-5.
விலை 16 காசுகள்.

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

கொடுந் திட்டத்தினாலே மாநில மக்களின் மன நிலையையும் மதிநிலையையும் மறந்துவிட்டு கொட்டியும் வெட்டியும் வேதனை வளர்த்தது இந்தியக் குடியரசுதான்! உரிமைகளைக் கேட்ட உழைப்பளிகள், புதுவாழ்வு கேட்டுப் போராடிய தொழிலாளர்கள், இவர்களுக்கெல்லாம் துப்பாக்கி வேட்டுக்களைப் பரிசுகளாக வழங்கிய பெருமையும் பாரதக் குடியரசுக்கு உண்டு! இதனைப் பார்த்துச்சிரித்து ரசித்துக் கொண்ட பெருமை பாரதத் தலைவருக்கும் பாரதப் பிரதமருக்கும் பிரதமரின் புன்னகைக்குப் புகழ் தேடிடும் பாரதப் புத்திரர்களுக்கும் பல முறைகள் கிடைத்துள்ளன! வாழ்வு கேட்டவர்கள் சாகடிக்கப் பட்டவர் துறைமுக நகரங்களிலே! 'திரும்பிப்போ' என்று சொன்ன தியாக உருவங்கள் தீய்த்து நசுக்கி எறியப்பட்டார்கள்! இத்தனையும் வாழ்வளிக்க வந்தவர்களின் வஞ்சகப் புகலிடமாக அமைந்திருக்கும் குடியரசின் பெயராலேதான் நடந்தன!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தை மறந்து விட்டுக் குடியரசு காட்டும் இருள் வெளியிலே செல்வதற்கு எவரும் துணிய மாட்டார்கள்! கொடுமைகளின் களஞ்சியமாக அந்த அரசியல் அமைப்பு உருவாகி வளர்ந்து விட்டது. அடக்கியாள விரும்பும் அதிகார வெறியர்களுக்கு அது கருவியாக இருக்கிறது! மராட்டிய மக்களை மரணக் குழி நோக்கி விரட்டியடித்த பாரதக் குடியரசுதான், குசராத்தியர்களின் குமுறுகின்ற இதய வெடிப்புக்களை குண்டுவீச்சுக்களால் மறைத்து விடலாம் என்று கருதிய குடியரசுதான், இன்று உள்ளன்பு நிறைந்த உரிமைகளை வாரி வழங்குவதற்குத் தயாராகி நாளும் குறித்து விட்டது! வாளும் கேடயமும் ஏந்திய மராட்டியமாவீரன் சிவாசியின் வீர உணர்ச்சியை அவர்கள் தங்களின் விழியசைவிலே காட்டினார்கள்; மலைக்கோட்டை மீதேறி சிலை வடித்த போதும் தங்களின் சினங்காத்துச் சிரங் குவித்தனர் இன்று ஆளவந்தார்கள், ஆதிக்க வெறி குறைந்து கரங்குலுக்கக் காத்துள்ளனர். பஞ்சாப் சிங்கத்தின் பாசத்தையும் நேசத்தையும் பெறுவதற்காகத் தாராசிங்கின் தாள்பணிந்தனர்; தயவு பெற்றனர். அந்தப் பெரியார்— தரங்கெட்டுப்போனவர்களின் தகாத செயல் முறைகளினாலே ஏமாந்து போனவர், ஏற்றங் கொண்டவர்களின் போற்றுதலுக்குப் பணியாதவர் இன்று போர்க்குரல் கொடுக்கிறார்—பஞ்சாப் சர்க்கரைப் பணியவைக்கப் படை திரட்டுகிறார். மாற்றுமுகாமினரின் அணிவகுப்பை அழகுற அமைக்கிறார்; அழைப்பும் அனுப்பி விட்டார் அரசியல் கட்சிகளுக்கெல்லாம்! சண்டிக்கார் நகரத்திலேயிருக்கும் சாகசவீரர்கள் எல்லாம் பழைய சரித்திரங்களின் செய்திகளை மறந்து விட்டிருந்தால் நினைவூட்டிக் கொள்ளட்டும் என்பதற்காகவே, கெய்ரான் சர்க்காரைப் பார்த்து தன் உரிமைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது உயரப் பறக்க இருக்கும் தன் உரிமைக் கொடியின் அறைகூவலை ஏற்க வேண்டும் என்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியக்குரலை வலுப்படுத்தும் இந்தச் செய்திகள் எல்லாம் இந்தியக் குடியரசு காட்டும் காந்தவிளக்குகளின் கைவரிசையை அடித்து நொறுக்குகின்றன. இவர்களுக்கும் மேலாக சில நூறு பேர்களாகவே இருக்கும் நாகர்கள் தங்களின் தனிநாட்டுக் கிளர்ச்சிக் கொள்கையை மிகவும் வலுப்படுத்திக்கொண்டார்கள்! இந்தியக் குடியரசின் ஆளவந்துள்ள ஆணழகர்கள் இராணுவத்தை வைத்துக்கொண்டுவேட்டையாடிய பின்பும் அந்த மக்களின் விடுதலை வேட்கையை மாய்க்கமுடியவில்லை. அவர்களைப் பிரித்துப் பேதம் வளர்த்தார்கள் – அவர்களிலே சிலர் விடுதலை இயக்கத்தைவிட்டு இழுத்து வரப்பட்டு விட்டனர். அவர்களை வைத்து, "இவர்கள் தனிநாட்டுக் கிளர்ச்சியை விரும்பவில்லை" என்ற செய்திகளைப் பரப்பினார்கள்! இத்தனைக்கும் பிறகுதான் பிசோ என்ற நாகர்களின் பெருந்தலைவன் தலைக்கு விலை வைத்திருக்கிறார்கள்! பாரதக் குடியரசின், பத்தினித் தன்மையிலே பங்கப்படாத இராணுவம் காடுமேடுகளில் அலைந்து திரியும் விடுதலைக் கிளர்ச்சியின் வீரத்தலைவனைப் பிடிக்க முடியாமல் விழியில் நீர்வழிய வாடிக் கலங்குகிறது! பதினாறு வகையான குறிக்கோளடங்கிய ஒப்பந்தச் சீட்டிலே கையொப்பம் தருவதற்குத் தயார் என்றுகூட இந்திய சர்க்காரின் சார்பில் அறிவிப்பு வழங்கப்பட்டுவிட்டது! ஆனாலும்கூட நாகர்களின் விடுதலை ஆர்வத்தைப் போக்கமுடியவில்லை. அசாம் போலீசாரின் தீவிரக் கவனம் நாகர்களை வேட்டையாடுவதில்தான் உள்ளதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியப் பெருமையை ஏக இந்தியப் பித்தர்கள் குறைத்து மதிப்பிடத் தயாராக இல்லை. விடுதலைவீரர்களை விலைகொடுத்து வாங்கி விடுவது எளிதான காரியமல்ல என்ற அனுபவ உண்மையை நாகர்கள் நன்கு புரிய அறிவித்து விட்டார்கள். இந்தியக் குடியரசின் பெருமையை அமெரிக்க நாட்டு அதிபர் அய்சனோவர் பாராட்டி விடுவதினாலோ அவருக்குப் பாரதத்தின் சார்பில் பத்து இலட்சம் மக்கள் கூடி நின்று வரவேற்று விடுவதினாலோ நிலைக்கப் போவதில்லை. அல்லது இரண்டரை லட்சம் மக்களைக்கூட்டி ரஷியநாட்டு அதிபர் ஒரோசிலோவ் வரவேற்கப் பட்டதினாலும் காந்திக் குல்லாய்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொன்வதினாலும் 'இந்தி-ருசி பாய் பாய்' முழக்கத்தினாலும கூடக் குடியரசின் படுதவறுகள் குறையப் போவதில்லை. வருகை தந்திருக்கும் குருசேவ் டில்லி விருந்துகளிலே வழங்கி இருக்கும் நகைச்சுவைக் கருத்துக்கள் புதியபெருமையை இந்தியக் குடியரசுக் கொள்கைகளுக்குத் தரப் போவதில்லை! இந்தியத் துணைக்கண்டத்து மக்களின் இன இலக்கிய மரபுகளைக் கண்காணித்துப் பெருமைப்படுத்துவதும், அரசியல் உரிமைகளை அனுமதிப்பதும், அடக்குமுறைகளை அறவே ஒதுக்கிவைத்துவிட்டு அறிவாயுதம் ஏந்தி அன்பு முறைபளினாலே நட்பினைப்பெருக்குவதுதான் ஏமாந்த நேரத்திலே ஏற்றங் கொண்டவர்களாக இருக்கும ஏக இந்தியச் செல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பான புகழைப் பெற்றுக் கொள்ளும் நல் வாய்ப்பாகும்! திராவிடத்தின் விடுதலையை எட்டிப்பறிக்கும் எண்ணங் கொண்டோர் எவராக இருந்தாலும் கணைதொடுப்போரானாலும் காலில் விழுவோராக இருந்தாலும், முன்னேற்றக் கழகத்தின் முன்னே முதுகு காட்டி ஓடபபோகிறவர்கள் என்பதைத்தான் வருங்காலம் வரைந்து காட்டக் காத்திருக்கிறது! ★

இடமின்மையால் "அப்பா" மற்றோர் ஐய வினாவிற்களித்த பதில் இவ்விதழிலேயே இடம் பெறவில்லை. அடுத்த இதழில் அது இடம் பெறும்.

உருவகம் :

சாதிச் சீலை

ஒரு பெரிய நாடக அரங்கம். பல ஆயிரம் பேர் அமர்ந்தும் உலவியும் காட்சிகளைக் கண்டு சுவைக்க அமைந்த அரங்கம். குழந்தை முதல் முதியவர்வரை குழுமியிருக்கின்ற ஆடரங்கம். ஒருவராய் இருவராய்ப் பல் குழுவினராய்ப் பெருகி வழியும் பேரரங்கம்.

நாடகத்தில் நடிப்பவர்க்கு அமைக்கப்பட்ட பரந்த பெரிய மேடையின் உயர்ந்த உன்னதத் தோற்றத்திற்கு பல வண்ணத் திரைச் சீலைகளும் கூரைகளும் மேலும் அழகு தந்தன. ஒளியின் சேர்க்கை வேறு உள்ளத்தைக் குளிர வைக்கும்; கூத்தாடத் தூண்டும். நாடகக் காட்சிகளைக் காணும் மக்கள் தடையின்றித் தாமும் சுவைத்து மகிழ வேண்டுமே என்னும் நோக்கத்தாலோ என்னவோ, தெரியவில்லை, மேடை தவிர முன்னே பரந்து கிடக்கும் வெட்ட வெளிக்குக் கூரையே இல்லை.

மக்களிடம் கட்டணம் வாங்க அங்கு ஆட்களுமில்லை; வேலியும் இல்லை. வந்தார் போனார் என்ற நிலையே நிலவியது. அவர்க்கு இவர் அறிமுகமில்லை; இவர்க்கு அவர் யாரோ? ஆனால் அனைவரும் வந்தனர்; கண்டனர்; சுவைக்கின்றனர்; ஏதோ பேசுகின்றனர். ஒருவர் முகத்திலே களி பொங்கி வழிதல் தெரிகின்றது. மற்றொருவர் ஏனோ அழுகின்றார். இருவர் இடை நின்ற சிறுவன் ஏதும் அறிய இயலாது வாயடைத்து நிற்கின்றான். இருவரையும் பார்த்து 'உங்களுக்கு நாடகம் பிடிக்கவில்லையா?' என்றான். இதற்குள் "கிண் கிணி" என்ற மணி ஓசை யாவரையும் கவர்கின்றது. எல்லோர் பார்வையும் மேடைப் பக்கம் திரும்புகின்றது.

நாட்டுக்கு நாடு இதுபோல் நாடக அரங்கங்கள் உண்டு. அவற்றில் வேறுபாடு முண்டு; முரண்பாடு முண்டு. ஆனால் எந்த நாட்டானும் நாடகம் ஆடாது போனதில்லை. என் தாய் நாட்டிலும் ஏதோ ஆடுகின்றார்கள்; பார்க்கின்றேன்.

திரைச் சீலை உயர்கின்றது. மங்கை அவள் ஆட்டம் மயில் ஆட்டம்தான். திங்கள் முகத்தில் பொங்குகின்ற பூநகைப்பு மங்காத பேரின்பம் தான். அது கண்டு அவ்விளைஞன் உள்ளம் ஏன் அப்படித் துள்ளுகிறது? துடிக்கிறது? அவனை வினவின் அவள் எனக்காகத் தான் ஆடுகின்றாள் என்கிறான். அவளும் 'அவனுக்காகவே ஆடுகின்றேன்' என்கிறாள். ஆனால் அவள் அங்கே நின்று ஆடுகின்றாள்; இவன் இங்கே இருந்து ஆடுகின்றான். இருவர்க்கும் இடையே பெரிய திரைச் சீலை உண்டு- தெரிகின்றது அவர்களுக்கு. என்றாலும் ஏன் அவன் அவள் என்றும், அவள் அவன் என்றும் ஏங்குகின்றனர்?

தடித்துப் பரந்த திரைச் சீலை ஒரே அடியாய் விழுந்துவிட்டது. மறுபடி சீலை எழுதுவதற்கான மணி ஓசையும் கேட்கவில்லை. இளைஞன் உள்ளத்திலோ பேரிரைச்சல்; அலை மோதல். உடல் துடிக்கின்றது; பதைக்கின்றது. அவள் உள்ளத்திலோ... யாருக்குத் தெரியும்? அவள் எங்கோ மறைக்கப்பட்டாள். திரைச்சீலை அவனை விழுங்கிவிட்டது. துடிக்கின்ற உள்ளத்தோடு மேடைக்குத் தாவிப் பிடிக்க முயல்கின்றான் இளைஞன். திரைச்சீலையின் ஒரு நுனிகூட அவன் விரல்களுக்குத் தட்டுப் படவில்லை. அதற்குள் யாரோ. சிலர் பின்னே சூழ்ந்து வந்து தூக்கிச் சென்றனர். "என்ன துணிவடா உனக்கு?" என்றார் ஒரு பெரியவர். "நம்மை எல்லோரையும் நொடியில் முட்டாள்களாக்கிவிடப் பார்த்தானே!" என்றார் நடுத்தர வயதுடைய ஒருவர். "முன்னோர்கள் பாடுபட்டு முயன்று போட்டிருக்கும் திரைச் சீலையையே கிழித்தெறியக் கிளம்பினானே கிறுக்கன்!"-கோயில் குருக்களின் குரல் இது. ஒன்பதின்மரின் ஒருமனதான 'முடிவு'க்கு இடையேயும் ஒருவன் குரல் மட்டும் இளைஞனுக்கு இணையாய் ஒலித்தது. ஆனால் அந்த ஒருவன் குரல் ஒடுங்க ஒடுக்கப்பட்டான்.

சாதி என்றும் சம்பிரதாயம் என்றும் சாத்திரம் என்றும் சனாதனம் என்றும், சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே, தடித்த திரைச்சீலையை தன்னலத்தார் சிலர் தொங்கவிட்டார். அதனால் தளர்ச்சிக்கும் தூற்றலுக்கும் இலக்காகிய இளம் உள்ளங்கள் எத்தனையோ ஆயிரம்!

சாதி ஒழிக! நீதி இதுதான்!

— அறவாழி.

கழகம் சூதாடுமிடமா ?

பேரன்புப் பெருந்தகையீர் !

வணக்கம். தங்கள் தமிழ் வெள்ளத்திலே மகிழ்ந்தாடும் கடல் கடந்த தமிழர்களில் ஒருவனுன நான் ஒரு ஐயத் தெளிவிற்காக இம்மடல் வரைகின்றேன்.

திரு. இளவேனில் எம். ஏ., பி. எல். அவர்கள் வரைந்திருந்த ஆங்கிலக் கட்டுரையொன்றின் தமிழாக்கத்தில் "கழகம்" என்னும் சொல், பண்டு சூதாடுமிடத்திற்குப் பெயராயிருந்தது என வரைந்துள்ளார். இது உண்மையா ?

அன்பு கூர்ந்து இதற்கு விளக்கம் தர வேண்டுகிறேன்.

தங்கள்,

கரு. திருவரசு, மலாயா.

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

பதில் :

அன்பரே,

'கழகம்' என்ற சொல்லுக்குச் 'சூதாடுமிடம்' என்று பொருள் இருப்பது கண்டு கவல்கிறீர்கள். நல்ல பண்புடைப் பொருள் குறித்த ஒரு சொல்லுக்கு இத்தகைய பொருளும் இருக்கலாமா என்று நீங்கள் மனம் நைவுறலாம். ஆனால் ஒரு சொல்லுக்குத் தற்செயலாக இரு பொருள்—சில சமயம் சிலேடையாகப் பயன்படும்—பொருள் இருப்பது எம்மொழியிலும் புதிதல்ல. பழிப்பதுபோலப் படிக்கும் இடங்களில் இது பயன்படக்கூடும். ஆயினும் அறிவுக்கழகம், சூதாடு கழகம் இரண்டுக்கும் 'கழகம்' ஒரு சொல்லாயமைந்தது தமிழின் 'துரதிர்ட்டம்' (இதைச் சொல்ல நல்ல தமிழ்ச்சொல் அகப்படவில்லை) என்று நினைக்கலாம். அதை நினைவூட்டும் ஆங்கிலமும் படித்த "மேதாவிகள்" இருப்பது இன்னும் 'துரதிர்ட்டம்' ஆகலாம்! ஆனால் அவருக்கு—அத்தகையோருக்கு

வெள்ளாளர் = உழவர்;

வெள்ளாட்டியர் = கூத்தியர்;

கடைசியர் = வேளாளப் பெண்டிர்,

கடைநிலைப் பெண்டிர், வேசியர்; எனத் தமிழ்ச் சொற்கள் உலகத்துக்கு அச்சாணியான உழவரைப் பழிப்பதையும்;

பொதுமக்கள் (Public) என்ற இக்காலக் குடியாட்சியின் உச்ச உயர் மதிப்புடைய சொல்லின் ஒருமை பொதுமகள் = வேசி; பொதுமகன் = வேசி மகன் என்று பொருளுடையதா யிருப்பதையும்; அவ்வாறே,

குடிமக்கள் (Citizens, Subjects) என்ற உச்ச உயர் அரசியல் குடியாட்சிக் கருத்துடைய சொல்லின் ஒருமை குடிமகன் = அப்பட்டன்; வேசி மகன் என்று பொருள் கொள்வதையும்; குடியர் குடிகாரர் என்று பொருள் தருவதையும்;

கடவுள் அடியார் என்று பொருளுடைய தேவரடியார், தேவடியாள் தமிழில் இழிந்த வேசியரையும்; நடன மாது, கலை மாது என்ற கலை, சமய, தெய்வப் பெயர்களும் அதே பொருள் கொள்வதையும்;

ஆங்கில முதலிய மொழிகளில் கூட உழவர் என்ற பழம் பொருளுடைய (Churl என்ற) சொல் காட்டாள், பயல் என்ற பொருளையும்; தாய் மொழி குறிக்கும் (Vernacular) என்ற சொல் அடிமை மொழி என்ற பொருள் தருவதையும்; கலைஞரையும் சின்னப் பயலையும (Fellow என்ற) ஒரு சொற் குறிப்பதையும் பிறவற்றையும் காட்டுக.

இவை மறுப்புரையல்ல, எதிர்ப்புரை.

தமிழில் இடைக் காலங்களில் சங்கம், மன்றம், கூடல், கழகம் என்ற சொற்கள் எப்படியோ முற்றிலும் ஒரு பொருட் சொற்களாகக் கருதப்பட்டுவிட்டன. இதனுல் சங்கம் சமஸ்கிருதச் சொல் என்று விலக்க முனைந்தவர் அதனிடமாகக் 'கழகம்' கொண்டனர். மன்றம் என்ற சொல் சங்கத்திலும் அவையினும் குறுகிய ஒரு குழாத்தின் பெயராக எப்படியோ கொள்ளப் பட்டது.

மன்றம் மக்கள் எல்லாரும் கூடுவது. 'மக்கள் மன்றம்' என்ற தொடர் இன்றும் இப்பொருள் மரபினைச் சுட்டிக் காட்டுகிறது நாடு, ஊர் ஆகிய எல்லையில யாவரும் வந்து கூடும் இடம் மன்றம். அதற்குரிய கட்டிடமே மண்டபம். ஆயிரக் கால் மண்டப மரபு இது.

சங்கம் பிரதிநிதிகள் கூடுவது. இதன் எதிர் சொல் அங்கம்—உறுப்பு. நாடு அல்லது ஊர் அல்லது குழாத்தின் உறுப்புக்களின் பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டது இது.

கூட்டம் இயல்பாக மக்கள் வந்து கூடிய திரள். சிறப்புக் காலத்தில் நிகழ்வது.

கூடல் வந்து கூடுவதற்கு வாய்ப்பான இடம். இது இச்சிறப்பால் நிகழ்வது. முக்கூடல் மூன்றுறுகள் கூடுவது என்ற மரபு இதைக் காட்டும்.

'அவை' சிறப்புடைப் பெரியோர் கூடுவது. பெரிதும் புலவர், அறிஞர்க்குரிய வழக்கு இது.

குழாம், குழு, குழுமம், உட்குழு, கழகம் படிப்படியாகச் சிறிதளவான கூட்டம்.

குழாம் பல பத்துக் கணக்கானவர்களையும்; குழு (Committee) பத்திருபதுக்கு உட்பட்டவர்களையும்; குழுமம் (Board), உட்குழு (Sub-Committee) பத்துக்கு உட்பட்டவர்களையும்; கழகம் நாலைந்துக்கு உட்பட்டவர்களையும் குறிக்கத் தக்கன. ஆங்கிலத்தில் ஆய் வட்டம் (Study-circle) கூட்டு (Group) என்பவற்றுடன் கழகம் ஒப்பாகும்.

தமிழ் முச்சங்கங்கள் பெரும்பாலும் சங்கங்கள் என்றே வழங்கின. உண்மையில் சங்கம் என்ற சொல் மன்றம், அவை ஆகிய இரண்டின் தன்மையையும் கொண்டது. அது மன்றம்போல எல்லா மக்களும் கூடும் கூட்டமன்று. அதே சமயம் அது மக்கள் பிரதிநிதிகள் கூட்டமன்று. 'அவை'யினைப்போல மாவட்ட, ஊர்ப் பிரதிநிதிகளான புலவர்களை உறுப்பாகக் கொண்டது. அதே சமயம் சங்கத்திலேயே பிரதிநிதிகளல்லாத பார்வையாளர்களான புலவர்களுஞ் சூழ்வதுண்டு. ஆகவே அது கூடலெனப்பட்டது. அதன் குழுக்கள், உட் குழுக்கள், குழுமங்கள் ஆகியவற்றின் தலைமையில் மொழியிலக்கியம் பற்றிய வளர்ச்சிக்கான முடிவுகள் எடுக்கும் கூட்டே கழகம் எனப்பட்டது. இதில் தலைவர் உட்பட ஐவருக்குமேல் இருப்பதில்லை. சிவபெருமானே தலைவராக இருந்ததாக மரபு கூறுவதாலேயே தேவார மூவர் மரபினர்.

**'கண்ணுதல் பெருங்கடவுளுங்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த
இப்பசுந் தமிழ்'**

என்று பாடினர்.

கழகம் தலைமைக் குழுமம் என்பதை உணராத இடைக்கால பிற்காலத்தார் அதையே சங்கம் என்றும், சங்கம் சமஸ்கிருதச் சொல் என்று கருதப்பட்ட நிலையில் கழகம் அதன் தமிழ் என்றும் தவருகக் கருதினர்.

சூது என்ற இடைக்காலச் சொல் 'சதுரங்கம்' என்ற உயர் அறிவுக் கேளிக்கையின் பெயர். இன்று உலகளாவப் பரவி அது மேலோர் கேளிக்கையாய் உள்ளது. அதனை ஆடுவதற்கு ஆள் திறனும் ஆழ்ந்த அறிவும் வேண்டும். ஒரு நால்வரோ, மூவரே, பெரும்பாலும் ஓரிருவரோ, சில சமயம் ஒரு நடுவருடன் அதனை விளையாடுவர். கழகம் சதுரங்க இடத்தையல்ல, அதனை ஆடும் குழுவை இதனுல் குறித்தது.

கழகம் சூதாடுமிடம் என்று பொருள்படும் என்று தம் அறியாமையின் ஆழம் கற்பனை செய்யாமல் கூறும் மேதைகட்குச் சுட்டிக் காட்டத்தகும் மற்ருெரு செய்தி உண்டு.

கழகம் சங்கத்தின் தலைக்குழுமம் மட்டுமன்று. தலைமையிடத்தில் மதுரையிலுள்ள சங்கத்துக்கு மாவட்டம், வட்டம், நகர், ஊர் வட்டம், ஊர் ஆகிய இடந்தொறும் துணைக்கிளை, மூலச்சிறு கிளைகள் கிளை, உண்டு. இந்த மூலமுதற்குழுவும் கழகம் என்றே அழைக்கப் பட்டது. ஒருசில புலவர் கூடி, அல்லது ஒருசில புலவரும் அவர் மாணவரும குழுமி, அதில் கல்வியாராய்ச்சி, பேச்சு நகையாடல் செய்து இன்புறுவர்.

**'இகலிலர் எஃகுடையார்
தம்முட் குழீஇ
நகலின் இனிதாயின்
காண்பாம், அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி'**

என நாலடி சிறப்பித்தது இத்தகைய புலவர் கூட்டுக்களையே.

இன்றைய, அணிமைக்கால மேலை இன்பக்குழுக்களை (Clubs) ஒப்ப, இவற்றினும் உயர் கேளிக்கையாகிய சதுரங்கம் அங்நாளையக் கல்வியறிஞர் குழுமங்களில் இடம் பெறுவதுண்டு. எனவேதான் சதுரங்க அரங்கம் நாட்டின் உயர் பண்பாட்ட ரங்கமாகவும் விளங்கிற்று. அதுவும் கழகம் எனவே வழங்கிற்று.

மொழியாராய்ச்சி மட்டுமன்றி, சமய அறிவுத்துறை ஆராய்ச்சிகளுக்கும் இத்தகைய குழுக்கள் ஐயாயிர ஆண்டுகட்குமுன் தமிழகத்திலும் தமிழகம் சூழ்ந்த கீழ்த்திசைப் புலமெங்கும் நிலவின. தமிழகத்தில் புலவர் குழுக்களின் ஆராய்ச்சி விளைவுகள் தமிழர் தேசியமையச் சங்கத்தில் சங்கப் பாடல்களாகத் தொகுக்கப்பட்டதுபோல, கிட்டத்தட்ட அதே நிலையில், அதே காலங்களில், கீழ்திசை எங்கும் உள்ள சமய, அறிவாராய்ச்சி முடிவுகளும் தமிழுடன் ஊடாடிய அக்காலைய வடவர் பொதுமொழியில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றின் மரபில் வந்த பல ஏடுகள் நமக்குச் சமஸ்கிருத மொழியில் 'உபநிடதங்கள்' என்ற பெயருடன் வந்தெட்டியுள்ளன.

'உபநிஷத்' என்ற சமஸ்கிருதச் சொல் 'கழகம்' என்ற தமிழ்ச் சொல்லின் மொழிபெயர்ப்பு. கழகங்கள் அல்லது உபநிடதங்களின் ஆராய்ச்சி முடிவுகளும் சமஸ்கிருதத்தில் கழகங்கள் அல்லது உபநிடதங்கள் என்றே வழங்கலாயின. இவ்வேடுகளிலேயே அவற்றின் ஆசிரியர்கள் அரச மரபினர் என்றும், அரச மரபினரிடமிருந்தே ஒரு சில பிராமணர் பெருமுயற்சிமீது 'அரச வித்தை'யாகிய இந்த ஆராய்ச்சி மரபைக் கற்று ஆரியருள் சில பிராமணருக்களித்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

இடைக்காலக் குருகுலங்கள் உபநிடதங்களின் மரபில் வந்தவையே. இதில் தமிழினத்தவர் குருமாரராய், ஆசிரியராய் இருந்து, ஆரிய மாணவர்கள் வாயிலாக ஆரியப் புலமெங்கும் இந்தக் 'கழக' அறிவு பரப்பினர். சதுரங்கத்தையும் இந்தச் சாத்திர அறிவையும் ஆரியர் தமிழரிடமிருந்தே கற்றனர். ஆனுல் தமிழர் அறிவைவிடத் தமிழர் சதுரங்கத்தை - - - அச்சதுரங்கத்திலும் கள்ள ஆட்டத்தையே - - - ஆரியர் மிகுதியும் பேணி, சதுரங்கத்தின் தமிழ்ப் பெயராகிய 'சூது' என்பதனையே தம் பண்புக்குரிய பெயராகப் புதுப்பொருள் கொண்டு விட்டனர்.

அறிவுக் குழுவாகிய கழகம் சதுரங்கக்குழுவாகி, அது ஆடும் இடமாகி, இறுதியில் சூதாடுமிடமாகத் தமிழ் உயர்பண்பு தேய்ந்து ஆரிய இழிபண்பான மாயவலை இது.

திறப்பு விழா.

ஓவியர் திரு. கே. எஸ். இராமு அவர்கள், கோடம்பாக்கம் ஆற்காடு வீதியில் 35/58-ம் எண்ணுள்ள கட்டடத்தில் தமது புதிய பணிமனையைத் தொடங்கி வைத்துள்ளார்.

தொடக்க விழாவுக்கு ஆசிரியர் கண்ணதாசன் அவர்களும், மற்றும் கலையுலகப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து வாழ்த்தினர்.

செழியன் உலா

மாடு அரிவாளுக்கும் சுத்தியலுக்கும் தப்பித்துவிட்டது. ஊரார் நிலத்தில் மேய்ந்து கொழுத்த காங்கிரசு மாடு மலைஞாலத்தில் வென்றுவிட்டது. இதனுல் ஆச்சரியமும் வருகிறது; ஆத்திரமும் எழுகிறது. வறுமையில் உழலும் கேரள மக்களை, அடக்கியும் மிரட்டியும், ஆசை காட்டியும் மோசம் செய்தும் ஊர்க்காலி மாடு பதவியை அடைந்துவிட்டது. என்ருலும் இது ஆட்சியை நோக்கி வெறித்தோடிய நேரத்தில் செய்த கொடுமைகளும் குற்றங்களும் பலப்பல. எண்ணற்ற பொதுவுடைமையரும் வேறு பல அப்பாவிகளும் மாட்டின் காலில் நசுங்கி மடிந்திருக்கின்றனர். தில்லி ஆட்சி காங்கிரசாரின் காலடியில் கிடப்பதால் இம்மாடுகள் இத்தனை பிணங்களைத் தம் காலடியில் போட்டு நசுக்கிவிட்டன; கேட்பாரில்லை. இனிமேலல்லவா இருக்கிறது, பழிவாங்கும் படலம்? "மறப்போம்; மன்னிப்போம்!" என்ற கொள்கை பொதுவுடைமையருக்கு உடன்பாடானதில்லை என்பதுதான் தெரிந்ததாயிற்றே!

x x x

கேரளத் தேர்தலுக்கு எங்கெங்கிருந்தோ; ஏதேதோ வந்திருக்கின்றன. காடு மலையெல்லாம் சுற்றி வாக்குகள் சேர்க்க, நூறு நூருய்க் கார்கள் வந்திருக்கின்றன. காங்கிரசார் இப்படிப் பல புத்தம் புது "சீப்"புகளைக் கொண்டு வருவதைக் கண்ட பொதுவுடைமையர், சில வாடகைக் கார்களைப் பிடித்திருக்கின்றனர். அவை வெளி மாநிலங்களிலிருந்து கேரளத்திற்குள் வந்தவை. இது தவறென்று குற்றம் சாட்டி, தண்டனை விதித்திருக்கின்றனர் திருச்சூர் நீதி மன்றத்தினர். இது தவறுதான். ஆனுல்...

"தில்லி அரசின் பாதுகாப்புத் துறைக்கு, ஒரு மோட்டார்க் கம்பெனி 500 சீப்புகளை பிப்ரவரியில் வழங்குவதாக ஒப்புக்கொண்டு, அதற்காக ஒப்பந்தமும் கையெழுத்தாகி முன்பணமும் வாங்கிக்கொண்டுவிட்டது. திடீரென்று கேரளத்தேர்தல் வந்து விடவே, இந்த 500 சீப்புக்களையும் தமக்குக்கொடுத்து உதவ வேண்டுமென, கேரளத்தேர்தல் நேரத்தில் காங்கிரசுத் தலைவர்கள் தொந்தரவு கொடுத்திருக்கின்றனர். தொந்தரவுக்குப் பயந்து மோட்டார்க் கம்பெனிக்காரர்கள் 500 சீப்புக்களை அனுப்பி விட்டனர்.

இவை திரும்பி வந்ததும் சுத்தம் செய்யப்பட்டு, போனது வந்தது போடப்பட்டு, பாதுகாப்புத்துறையினருக்குச் சொன்னபடி பிப்ரவரியில் அனுப்பப்பட்டு விடுமாம். இவ்வாறெல்லாம் அறிகிரேம்!" என்று ஆங்கில ஏடு ஒன்று குறிப்பொன்று தந்திருக்கிறது. பொதுவுடைமையருக்குத் துணைவந்த வாடகைக்காரோட்டிகள் தண்டிக்கப்பட்டு விட்டனர். நீதியின்படி சரிதான், இது!

ஆனுல், பாதுகாப்புத்துறைக்கு உரியவண்டிகளைத் தனக்குப்பயன்படுத்திக் கொண்ட காங்கிரசாரைத் தண்டிக்கப் போவது யார்? காங்கிரசாருக்குத் துணைபோய்ப் பாதுகாப்புத் துறையினரை ஏமாற்றிய மோட்டார்க் கம்பெனிக்காரர்களைத் தண்டிக்கப் போவதுயார்?

x x x

அண்மையில் ஓர் ஏட்டில் சாமியார் ஒருவர் மாண்ட செய்தியை, "மடாதிபதிகளின் சீவன் முக்தி' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தனர், இதே ஏட்டின் சென்னைப் பதிப்பில் பல ஆண்டுகளுக்கு முன் ஒருசெய்தி வந்தது. சிருங்கேரி மடாதிபதி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட அச்செய்திக்கு **"சிருங்கேரி மடாதிபதி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார்!"** எனச் "சற்றும் மரியாதை"யின்றித் தலைப்பைக் கொடுத்து விட்டார், செய்தியை எழுதிய துணையாசிரியர். அது எங்கெங்கும் வம்பைக்கிளப்பி விட்டுவிட்டது. "...மணியில் சகத் குருவுக்கு அவமதிப்பா?" என்று கண்டனக் கடிதங்களும் ஆரவாரங்களும் கிளம்பி விட்டன. உடன் பொறுப்பாசிரியர், செய்தி எழுதிய துணையாசிரியரைக் கூப்பிட்டு, "ஓய்! இனிமேல் எந்தச் சாமியார் செத்தாலும் சோதியில் கலந்தார் என்று எழுதும்! 'சிருங்கேரி சகத்குரு சோதியில் கலந்தார்' என்று எழுதவேண்டியதை எப்படியோ எழுதி வம்பை விலைக்கு வாங்கி விட்டீரே! அவன் பண்டாரப் பரதேசியானுலும் 'சோதியில் கலந்தார்!' என்றே எழுதும்!" என்ருராம். அவமானப்பட்ட துணையாசிரியரே கொஞ்ச நாட்களுக்குப்பின் திருப்பதி கோவிலில் ஒரு பரதேசிச் சாமியார் வலம் வரும்போது செத்துவிழுந்ததை எழுதவேண்டி வந்ததாம். பொறுப்பாசிரியார் இல்லாததால் தானே அச்செய்தியை எழுதி வெளியிட்டுவிட்டாராம் அவர். அச்செய்திக்கு அவர் தந்த தலைப்பு இது: **"திருப்பதி கோவில் வலம் வந்த சாமியார் சோதியில் கலந்தார்!"**

மறு நாள் காலையில் ஏட்டைப் பார்த்த பொறுப்பாசிரியர் தலையில் அடி அடி என்று அடித்துக்கொண்டாராம். "குதிரைக்குக் குர்ரம் என்ருல் ஆனைக்கு அர்ரம் என்கிருன்! என்ன பண்ணித் தொலைப்பது?" என்று அழுதாராம்!

x x x

கேரளத்தின் இந்த நேர விவகாரங்களுக்கு ஓர் ஐந்தொகை போட்டுப் பார்ப்போம்.

1956-ம் ஆண்டில் 15000 சதுரக் கற்கள் பரப்பளவுள்ளதாய் உருப்பெற்ற மலைஞால மாநிலந்தான் இந்தியக் குடியரசிலேயே சிறிய மாநிலம். ஒன்றரைக் கோடி மக்கள் வாழும் இம்மாநிலத்தில் 100-க்கு 59 ஆண்களும், 100-க்கு 37 பெண்களும் கல்வியறிவுள்ளோர். மொத்தத்தில் நூற்றுக்கு 48 பேர் கல்வியறிவு பெற்றுள்ள இம்மாநிலம்தான் அதிகம் படித்தவர்களைக் கொண்டது. வளங்கள் பல இங்கு குலுங்கியும் உணவுப் பொருள்கள் போதிய அளவு கிடைக்காததால், மொத்தத் தேவையில் 50 % பிற மாநிலங்களிலிருந்தும் நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்து கொள்கின்றனர்.

1957 பொதுத் தேர்தலில் பொதுவுடைமையர் வென்றனர். சுயேச்சை வி. ஆர். கிருட்டிணய்யர் என்பவரையும் சேர்த்துக்கொண்டு அமைச்சரவை அமைத்து 28 திங்கள் ஆண்டனர். 1957 தேர்தலில் 124 காங்கிரசார் போட்டியிட்டனர்; 81 பேர் தோற்றனர்; 43 பேரே வென்றனர். அத்தேர்தலில் பொதுவுடைமையர் 99 பேர் போட்டியிட்டனர்; 60 பேரே வென்றனர். சுயேச்சையாளர் ஐவரைச் சேர்த்துக்கொண்டு அமைச்சரவை அமைத்தனர்; தில்லியால் 28திங்களுக்குப்பின் கலைக்கப்பட்டது அவ்வமைச்சரவை.

இந்த 1-2-60 அன்று 80,38,262 வாக்காளர்களைக் கொண்ட 126 தொகுதிகளுக்குத் தேர்தல்கள் நடந்தன. மொத்தம் 81 இலட்சத்து 93 ஆயிரத்து 127 வாக்குகள் பதிவாயின. காங்கிரசும் பி-சோவும் லீகும் கூடி 94 இடங்களைப் பெற்றிருக்கின்றன. பொதுவுடைமையர் 26 இடங்களையும் அவர்களின் ஆதரவாளர்கள் 3 இடங்களையும் பெற்றுள்ளனர். சீகண்டன் நாயரின் புரட்சிகர சோசலிச இயக்கத்தினர் 18 இடங்களுக்குப் போட்டியிட்டனர்; ஒரே ஒரு இடம்தான் கிடைத்தது. 3 இடங்களுக்குப் போட்டியிட்ட சனசங்கமும், மற்றும் லோகியா சோசலிசத்தாரும் கேரள சோசலிச இயக்கத்தாரும் ஓர் இடம் கூடப் பெற முடியவில்லை- சனசங்கத்திற்கு மொத்தம் 5277 வாக்குகளே கிடைத்திருக்கின்றன. பொதுவுடைமையருக்கு மொத்த வாக்குகளில் 43 சதவிகிதமும், முக்கூட்டணிக்கு 53 சதவிகிதமும் கிடைத்துள்ளன. பொதுவுடைமையர் வாக்குகளுள் அவர்கள் நிறுத்திவைத்த சுயேச்சையாளர்களின் வாக்குகளும் அடங்குகின்றன.

ஆகப் பொதுவுடைமையர் தனியணி என்ற முறையில் அதிக வாக்குகளைப் பெற்று விளங்குகின்றனர்.

அவர்களுக்கான வாய்ப்புகள் மறுக்கப்படாமலும் சிதைக்கப்படாமலுமிருந்திருந்தால் அதிக வாக்குகளைப் பெற்ற அவர்களே, அதிக இடங்களையும் பெற்றிருக்கக்கூடும்.

— மா. பாண்டியன்.

மலர் மணம்

தமிழரின் தனிப் பெரும் திருநாளாம் பொங்கலன்று 'தென்றல்' மலரைக் கண்டேன்; அதிலுள்ள தேனையெல்லாம் உண்டேன்; மயக்கம் கொண்டேன்.

அமுதக் கருத்து மணிகளில் எதைச் சொல்ல! எதை விட! அத்தனையும் முத்தனைய சொத்துக்களாயிற்றே! அண்ணுவின் 'இரட்டிப்பு மகிழ்ச்சி'யையா? ஆசிரியரின் 'தத்துவக் கல்லறை'யையா? நாவலரின் எழிலோவியத்தையா? அண்ணுவும் மயிலும் தாங்கி வந்த அற்புதத்தையா? அன்பழகனுர் காட்டிய 'பூகோளம் கண்டவர்'களையா? நமது வழக்கறிஞர் சொன்ன சட்டத்தையும் சமுதாயத்தையுமா? பன்மொழிப் புலவர் அப்பா தந்த 'யாழ்நங்கை'யையா? எதைக் குறிப்பிட்டாலும் ஒன்றைவிட ஒன்று மிஞ்சுமன்ருே? ஆனுல்...

எனது நண்பர் "நீலமலையான்" எழுதிய 'கானகத்து மோகினிக்கு'த் தந்திருந்த ஓவியம்தான் கடுகளவும் பொருத்தமில்லை. விழாவில் தொதவர்கள் ஆடும் காட்சி கிராம மக்களை நினைப்பூட்டுகின்றன! "எருமை நெய் பூசிச் சுருள் சுருளான அவள் கூந்தல் முறுக்கித் தொங்கவிடப்பட்டிருந்தது" என்றிருக்க, ஓசியாவின் கூந்தலைக் கொண்டை போட்டல்லவா காட்டியிருக்கிறீர்கள். தொதவப் (Todas) பெண்கள் எப்போதுமே அடி முதல் கழுத்துவரை ஒருவிதப் போர்வையால் போர்த்தியவண்ணம் தானிருப்பார்கள்.

பிலோ இருதயநாத் அவர்களின் கட்டுரையில், நீலகிரி வாழ் தொதவர்களின் மணமுறையை குறிப்பிட்டிருப்பது தவருகும். எக்காலத்திலும் அவர்கள் காளைகளை வளர்ப்பதில்லை. எருமை மாடு ஆண் கன்று ஈன்ருல் அப்போதே கொன்றுவிடுவார்கள்! அதன் காரணத்தை விளக்க புகுந்தால் பெரும் கட்டுரையாகிவிடும். சான்றுக்குக் கலித்தொகைப் பாடலைக் காட்டியிருப்பது கிஞ்சித்தும் சரியில்லை. நான் கேட்டறிந்து ஆராய்ந்த வரையில், காடுகளில் • திரியும் இள மங்கையரைக் கண்டு இளைஞர்கள் விரும்பினுல், அவர்கள் இருவருமே கானகதேவி மீது ஆணை கூறி மணமுடித்துக் கொள்வர் என்றும், நெடுங்காலத்திற்குப் பின்னுல்- ஒரு வீட்டில் பெண் இருப்பாளானுல், அவளை விரும்புகின்ற இளைஞன் இரவோடு இரவாகத் தன் இல்லத்திற்கு தூக்கி சென்றுவிட்டால்-பெரியவர்கள் கூடிமணம் முடித்து வைப்பார்கள் என்றும், இந்த ஐம்பது-அறுபது ஆண்டுக் காலமாகப் பெண் வீட்டருக்கு ஏழு எருமைகளை ஓட்டி விட்டு விட்டு மணமகன் பெண்ணைக் கூட்டிச்செல்வானென்றும். அவள் கர்ப்பவதி ஆனுல்தான் இருவரும் மணம் முடித்துக்கொள்வார்களென்றும் திட்டவட்டமாகத் தெரிகிறது.

ஆகவே, இந்த இரண்டு குறைகள் தவிரத் தென்றல் மலரில் தவறுகாண யாருக்கும் வல்லமையில்லை! அப்படிக் குறை எவனுவது கூறுவனுனுல்அவன் தென்றலைத் தழுவியிருக்கமாட்டான். வீசுக இனிய தென்றலாய்! மலர்க நாளிதழாய்!

— அ. பொன்னழகன், உதகை.

முல்லை
மார்ச் முதல் நாள்
எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசைலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு. சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.